நகர் சபை, யாழ்ப்பாணம்)

பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 03 வெள்ளிக்கிழமை (16.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 141

# பல தரங்களில் அமைச்சர் பதவிகள் புதிய வியூகம் வகுக்கின்றார் ஜனாதிபதி

## மாவட்ட ரீதியில் வழிநிலை அமைச்சர்கள்

கொழும்பு, ஏப்ரல் 16

புதிய அரசில் 35 இற்கும் குறைவான அமைச்சர்களே இடம்பெறுவர் என்ற தகவல் ஆளும் தரப்பின் உயர் பீடத்தினால் வெளியிடப்பட்டு வருகின்ற அதேவேளை, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு மேலதிகமாகப் பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், வழிநிலை (Line) அமைச்சர்கள் என பல தரத்தில் - பல மட்டங்களில் - அமைச்சர்களை நியமிப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆராய்ந்து வருகின்றார் என சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு மேலதிகமாகவே பல தரங்களில் அமைச்சர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார்கள்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சரின் கீழ் சில பிரதி அமைச்சர்கள் அல்லது வழி நிலை அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

மாவட்ட ரீதியில் வழிநிலை அமைச்சர்கள்

அதிலும் வழிநிலை அமைச்சர்கள் மாவட்ட ரீதியில் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும், சம்பந்தப்பட்ட அமைச்சின் நடவடிக்கைகள் அந்தந்த மாவட்டங்களில் சீராக முன்னெடுக்கப்படுகின்றமைக்கு இவர்களைப் பொறுப்பாக்குகின்றமை குறித்து ஜனாதிபதி ஆலோசித்து வருகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் இருந்து இலங்கையர் நால்வர் நாடுகடத்தப்படுவர்

கொழும்பு, ஏப். 16

சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என அடையாளம் காணப்பட்ட நான்கு இலங்கையர்கள் அமெரிக்காவில் இருந்து விரைவில் நாடுகடத்தப்பட உள்ளனர்.

இவர்கள் நால்வரும் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களுடன் வந்த மேலும் 10 வெளிநாட்டவர்களும் கைது (18ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 6 வினாத்தாள் - 1 இன்று வெளிவரவில்லை.

19.04.2010 திங்கட்கிழமை பிரசுரமாகும்.

## புதிய நாடாளுமன்றின் முதலாவது அமர்வுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க விசேட கருமபீடம்

கொழும்பு, ஏப்.16

ஏழாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வை நடாத்துவதற்கு ஏதுவாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வசதிக்காக தகவல் கருமபீடமொன்றை மூன்று நாள்களுக்கு இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களில் மு.ப. 09.30 மணி முதல் பி.ப. 3 மணி வரை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் குறிப்பிட்ட கருமபீடம் இயங்கவுள்ளது.

இக்கரும பீடத்தில் நாடாளுமன்ற உறுப்பனர்களுக்குத் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஒபாமாவின் சார்பில் ஹிலாரி கிளின்ரன் இலங்கையருக்கு புதுவருட வாழ்த்து

வாஷிங்டன், ஏப்.16

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சார்பில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் அம்மையார் இலங்கை மக்களுக்கு தமிழ், சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

அந்த வாழ்த்தில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

ஒவ்வொரு வருடமும் இந்தக் கொண்டாட்டங்கள் புதிய நம்பிக்கையையும், புதிய உறுதிப்பாட்டையும் தருவனவாக வருகின்றன. ஆனால் இந்த வருடம் புதிய பிரதி பலிப்புடன் அவை வந்திருக்கின்றன.



பல தசாப்தங்களின் பின் இப்போதுதான் முதல் தடவையாக இலங்கையில் எல்லாப் பகுதி மக்களும் ஒன்றிணைந்து, அமைதியான, ஐக்கிய தேசத்தில் இதனைக் கொண்டாடும் நிலைமை வந்துள்ளது.

சகிப்புத் தன்மை, மனித உரிமைகளை மதித்தல் போன்ற (18ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மா இந்தியா வர விரும்பினால் அனுமதி

சென்னை, ஏப்.16

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயாரான பார்வதி வேலுப்பிள்ளை மருத்துவக் கவனிப்புக்காக இந்தியா வர விரும்பினால் அதற்கு இந்தியா அனுமதி அளிக்கும் என்று சென்னை வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதற்கான இணக்கத்தை இந்தியா ஏற்கனவே பிரபாகரனின் தாயாரின் பராமரிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டதாகவும் அறியவந்தது.

பிரபாகரனின் தந்தையார் திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் மறைவை அடுத்து வல்வெட்டித்துறையில் தங்கியிருந்த பார்வதி வேலுப்பிள்ளை பின்னர் கொழும்பு ஊடாக வெளிநாடு ஒன்றுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை ஆசிரியர் லசந்த கொலை குறித்து தடுத்துவைக்கப்பட்ட சிப்பாய்கள் விடுவிப்பு

கொழும்பு, ஏப்.16

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை உள்ளிட்ட சம்பவங்களில் சந்தேகம் காரணமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பதினேழு இராணுவச் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர்களைக் கொன்றது, கொல்ல முயற்சித்தது போன்ற குற்றங்களுக்காக சந்தேகத்தின் பேரில் இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கடந்த வருடம் ஜனவரி எட்டாம் திகதி (18ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றில் இருந்து முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.16

அளவெட்டிப் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

இளவாலை வடக்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த 82 வயதுடைய இளையதம்பி தர்மலிங்கம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலம் யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-6)

## கிழக்கு மாகாண ஆளுநர் பதவி அலி ஸாஹிர் மௌலானாவுக்கு?

### அதற்கு முன் 'கிழக்கின் உதயம்' தலைவராவாராம்

கொழும்பு, ஏப்.16

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும் கட்சியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானாவை கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார் என்று மௌலானாவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு முன்பாக அவருக்கு 'கிழக்கின் உதயத்'தின் தலைவர் பதவியை வழங்கி, அதனைத் தொடர்ந்து ஒரு மாதத்தின் பின்னர் அவரை ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அமைச்சரவை அமைக்கப்பட்டவுடன் கிழக்கின் உதயத்தின் தலைவர் பதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி மௌலானாவிடம் உறுதியளித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

இன்னும் 02 நாள்களில்

JAFFNA International 2010 TRADE FAIR

2010 ஏப்பிரல் 18,19,20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

## தேர்தல் முடிவுற்ற போதிலும் வன்முறைகளில் ஈடுபடுவோர் உடன் கைது செய்யப்படுவர் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, ஏப்.16

தேர்தலக்குப் பின்னரான வன்முறைகளைத் தடுப்பதற்கு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், குழப்பம் விளைவிப்பவர்களுக்கு எதிராக எவ்வித பாகுபாடுமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார். தேர்தல் முடிவுற்ற போதிலும் தேர்தல் தொடர்பான சட்ட விதிமுறைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளன எனத் தெரிவித்த அவர், எவரேனும் அசம்பாவிதங்களில் ஈடுபட்டால் அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

குழப்பம் ஏற்படுத்த முயற்சிப்பவர்களுக்கு எதிராக எந்தவித பாகுபாடுகளும் இன்றிக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் சட்ட விதிமுறைகளுக்கு அமையத் தேர்தல் முடிவுற்று ஏழு நாள்களுக்குள் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகள் நடத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் (18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட இவ்வருடத் திறகான தேசிய கலை, இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளிவந்துள்ளன.

போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த போட்டியாளர்களும் பின்பற்றி இருந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்றோரின் ஆக்கங்கள் மாவட்டமட்டப் போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அறிவிக்கப் படுகிறது.

போட்டி முடிவுகளின் விவரம் வருமாறு:

**கட்டுரை-கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்-கு.ரதீபா (மட்டுவில் கமலாசனி வித்தி.), இரண்டாமிடம் - க.தர்மிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), மூன்றாமிடம்- ர.தேனுஷன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்-சி.லக்ஸியா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), இரண்டாமிடம் - வ.சசிகலா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), மூன்றாமிடம்- ச.குகப்பிரியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**கவிதை- கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்-ஜெ.ஜெயதீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - ப.நிதுஷன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம்- இ.சமிதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்-பா.கிரிகுஸா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), இரண்டாமிடம் - தௌ.கார்த்திகா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), மூன்றாமிடம்- சி.ரம்யா (சாவகச் சேரி இந்துக் கல்லூரி).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்-வ.சின்னப்பா (தனங்கிளப்பு), இரண்டாமிடம் - ந.ரம்சனா (நுணாவில் மேற்கு), மூன்றாமிடம்- ச.அகிலன் (கல்வயல்).

**சிறுகதை- கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்-ப.நிதுர்ஷன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - சி.லக்சியா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்-யோ.கிரிசாந்தி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), இரண்டாமிடம் -பா.கிருஷா (மீசாலை வீரசிங்கம் (ம.வி.), மூன்றாமிடம்- க.மனோசா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்-ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு), இரண்டாமிடம் -க.சோமசேகரம் (சாவகச்சேரி வடக்கு), மூன்றாமிடம்- ந.பிருந்தாவனிதை (சாவகச்சேரி).

**பாடலாக்கம்- கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்-மு.அபிராமி (மீசாலை வீர சிங்கம் ம.வி.).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்- பா.கிருஷா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்-ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு), இரண்டாமிடம் -திருமதி இராசேந்திரம் (மீசாலை வடக்கு), மூன்றாமிடம்- வ.சின்னப்பா (தனங்கிளப்பு).

**ஆங்கிலம் -கவிதை**

**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்- ம.அபிராமி (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**திறந்த பிரிவு**

முதலாமிடம்-வ.சின்னப்பா (தனங்கிளப்பு), இரண்டாமிடம் -அன்ரனி சரண் (சாவகச்சேரி), மூன்றாமிடம்- லோ.கபாலினி (சாவகச்சேரி).

**சிறுகதை**

முதலாமிடம்- வ.சின்னப்பா (தனங்கிளப்பு).

**பாடலாக்கம்**

முதலாமிடம்-கே.ஜெயப்பிரதாயினி (சாவகச்சேரி), இரண்டாமிடம் -ம.விவேகானந்தன் (சாவகச்சேரி), மூன்றாமிடம்- திருமதி ச.உருத்திராதேவி (சாவகசேரி).

(04-207

# நளினியின் மனு மீதான விசாரணை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது

தமிழ அரசின் உத்தரவுக்கு எதிரான நளினி மனுமீதான விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

சிறையில் இருந்து விடுவிக்க முடியாது என்ற தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நளனி கடந்த 12 ஆம் திகதி மனுத்தாக்கல் செய்திருந்தார். அதில் தம்மை விடுவிக்க இயலாது என்பதற்கு தமிழக அரசு தெரிவித்துள்ள காரணம் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று நளினி தமது மனுவில் கூறியிருந்தார். கடந்த 10ஆண்டுகளில் 2ஆயிரம் ஆயுள் தண்டனை கைதிகளை கருணை அடிப்படையில் விடுதலை செய்த தமிழக அரசு, தம்முடைய விடுதலைக்கு பொலிஸாரிடம் அறிக்கை கேட்பது பாரபட்சமானது. என்றும் நளினி தெரிவித்திருந்தார். இந்த மனு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. ஏற்கனவே நளனி மனு நிராகரிக்கப்பட்டது ஏன் என்பது குறித்த உத்தரவு நகலை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் நளினி வழக்கறிஞர் ராதாக்கிருஷ்ணன் நீதிமன்றத்தில் மனுவை நிராகரிக்கப் பட்டதற்குரிய நகலை வழங்க அவகாசம் கேட்டதால் வழக்கு விசாரணை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது. (அ-6)


## German, Swiss Deutsch மொழி வகுப்புக்கள்

மேற்படி வகுப்புகள் வருகிற வைகாசி மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:
MISS,Kajenthini.S
No-55,Somasundram Lane,
Chundukuly, Jaffna.
[யாழ்.கச்சேரிக்கு அருகாமையில்]
தொ.பே: 0771604823


## தவறிவிட்டது

மானிப்பாய் வீதி, பூபதிகடை அருகில் 14.04.2010 அன்று 'கேயர்செற்' ஒன்றும், மைக்வயரும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

மல்லிகா சவுண்ட்ஸ், உயரப்புலம், ஆனைக்கோட்டை.

குறிப்பு: சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (நிமால்)

(சாரதி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ்.சாலை)



புலோப்பளை மேற்கு, பளையைப் பிறப்பிடமாகவும், இணுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (நிமால்) 14.04.2010 புதன்கிழமை இரவு அகால மரணமடைந்தார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை- காணிக்கைமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வராசா-திருப்பதி தம்பதியினரின் மருமகனும், சுவேந்தினியின் பாசமிகு கணவரும், அபின்சா, அனோஜன், கஜித், சாந்தூஸ், யுனைஸ் ஆகியோரின் அருமைத் தந்தையும், ஜூட்வினிதா (ஆசிரியை- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), ஹென்றி (ஜேர்மனி), இமானுவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமாரன் (அதிபர், யா/குடமியன் அ.த.க.பாடசாலை), புஸ்ப லீலா (ஜேர்மனி), சிலுவைதாஸ், அமலதாஸ், பிரேமதாஸ், ஜேசுதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேனுகானி, சங்கீர்த்தன் ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இல.25, டச்சுவீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, "யூலனூர்", அச்செழு, நீர்வேலி ஹென்றியரசர் தேவாலயத்தில் ஆத்மசாந்தி ஆராதனையின் பின்னர் தேவாலய சோமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25, டச்சுவீதி,
சாவகச்சேரி.
தொ.பே:0213217898 (சி/566595)

தகவல்:
மனைவி-மெ.சுவேந்தினி.
மைத்துனர்-க.உதயகுமாரன் (அதிபர்).

## கதிர்காமு கந்தசாமி

(இளைப்பாறிய மருந்துக் கலவையாளர்)



வெள்ளிருவை, அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தசாமி நேற்று (15.04.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும். [illegible], சாந்தகுமார் (ஆசிரியர்,யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை), தேவகுமார் (சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர், நெல்லியடி), சுதாஜினி, ராஜகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செந்தில்நேசன் (ஆயுள்வேத வைத்தியர்), யசோதரா (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), கவிதா, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசம்மா, காலஞ்சென்ற தம்பிராசா,மற்றும் நடராசா (இளைப்பாறிய மருந்துக் கலவையாளர்), பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய மருத்துவ மேற்பார்வையாளர்), பாலகிருஷ்ணபிள்ளை (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்லையா, மனோன்மணி, யோகேஸ்வரி, பாலபரமேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளிருவை,அல்வாய்கிழக்கு,
அல்வாய், பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நல்லையா தையல்நாயகி



நாவலர்வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா தையல்நாயகி நேற்று (15.04.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், சற்குணராஜா, மகேந்திரராஜா, செல்வநாயகி, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல,204,நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்,
ந.மகேந்திரராஜா
(சகோதரன்).

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி சாந்தரூபி ஸ்ரீரூபன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி முத்துத்தம்பி இராஜலட்சுமி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம், யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலயம் மட்டுவில். (C/566587)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிப்பிள்ளை மகிழ்மணி



உரம்பிராய் வடக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை மகிழ்மணி நேற்று (15.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சர்வானந்தம், சத்தியதேவி,சாரதாதேவி, சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயரத்தினம், தணிகாசலம், சோதிலிங்கம் (சோதி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெயந்தன்(சுவிஸ்- உரிமையாளர்,கரமாட்சி லொறி) ஞானேஸ்வரன் அகிலன் (ஜேர்மனி), தீபா (கனடா), சுகிர்தா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிசன், அக்சயா, மதுமிதன் (கனடா), கஸ்மினி (கனடா) ஆகியோரது பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தயவு செய்து இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மகாலிங்கம் தில்லைநாதன்



88,பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மகாலிங்கம் தில்லைநாதன் நேற்று (15.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-கௌரியம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்-அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தினியின் அன்புக் கணவரும், நிரோசன், டினுசன், யதுஷன், நிலோசன்,நிதர்சன், டிலானி, நிந்துஜா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

88,பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை. (97071)

தகவல்:
தி.டினுசன் (மகன்)

## முதலி உதயகுமார்



கடந்த 28.02.2010 அன்று லண்டனில் காலமாகிய நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும், லண்டனில் வசித்தவருமான முதலி உதயகுமார் அவர்களின் பூதவுடல் லண்டனில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு இறுதிக்கிரியைகள் நாவற்காடு, வரணியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு,
வரணி. (96962)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொதுத் தேர்தல் பெறுபேறுகளில் பேரினவாதிகளுக்கும் பெரும் அடி

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சிக் கூட்டணி - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு - பெரு வெற்றியீட்டியுள்ள போதிலும், அதனுடன் சேர்ந்து நின்ற சிறிய கட்சிகளுக்கு இத்தேர்தல் நல்ல பாடம் புகட்டியிருப்பதையும் கூட நாம் கவனிக்கத்தக்கதாக உள்ளது.

குறிப்பாக ஆளும் தரப்புடன் சேர்ந்து பேரினவாதக் கருத்துகளை வெளியிட்டு வந்த இனவாத அணிகளுக்கு இந்தத் தேர்தலில் நல்ல - செமத்தியான - அடி விழுந்திருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கடந்த நாடாளுமன்றத்தின் காலம் முழுவதும் பெரும்பாலும் இனவாதமே பேசி வந்த ஜே.வி.பிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இந்தத் தேர்தல் முடிவு மரண வீழ்ச்சிதான்!

2004 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டு 39 எம்.பி. பதவிகளை ஈட்டிய ஜே.வி.பியில் இப்போது ஆக வெறுமனே ஐவருக்கு மட்டுமே எம்.பி.பதவி மீளவும் கிடைத்திருக்கின்றது. தேசியப் பட்டியல் மூலம் அவர்களுள் மேலும் ஓரிரு பழைய முகங்களுக்கு எம்.பி.பதவி கிடைக்க வாய்ப்புண்டு.

முன்னைய பொதுத் தேர்தலில் ஐ.ம.சு. கூட்டமைப்பில் ஜே.வி.பி. இணைந்து போட்டியிட்ட சமயம் அக்கட்சி ஐக்கியப்பட்டிருந்தது. பின்னர் விமல் வீரவன்ஸ தரப்பினர் தேசிய சுதந்திர முன்னணியாகப் பிரிந்து சென்றனர்.

இந்தத் தேர்தலில் 'ஒரிஜினல்' ஜே.வி.பி. ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சேர்ந்து ஜனநாயக தேசிய முன்னணியாகப் போட்டியிட, விமல் விரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணியினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் சேர்ந்து களத்தில் இறங்கினர்.

வீரவன்ஸ அணியில் கொழும்பு மாவட்டத்திலிருந்து விமல் வீரவன்ஸவும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து வீரகுமர திஸநாயக்காவும் மீண்டும் எம்.பிக்களாகியிருக்கின்றனர். அவர்களில் பியசிறி விஜயநாயக்க (கம்பஹா), அஞ்ஞான் உம்மா(கம்பஹா), விமல் வீரவன்ஸவின் சகோதரர் சரத் (மாத்தளை), தர்மசேன கொடித்துவக்கு(அம்பாந்தோட்டை), புத்ததாஸ விதானாராய்ச்சி(கேகாலை), அரவிந்த வன்னியாராய்ச்சி(மாத்தளை), நிமால் பிரேமவன்ஸ (கண்டி), நிமால் பியதிஸ்ஸ (நுவரெலியா), ராஜரஞ்சித் குணரட்ண(பொலன்னறுவை), சேனரத்ன டி சில்வா(குருநாகல்), சமனசிறி ஹேரத்(புத்தளம்), திபால் குணசேகரா (இரத்தினபுரி) ஆகியோர் தமது எம்.பி. பதவிகளைக் கோட்டைவிட்டுள்ளனர்.

இதேசமயம் 'ஒரிஜினல்' ஜே.வி.பியில் சுனில் ஹந்துன்நெத்தி (கொழும்பு), விஜித ஹேரத்(கம்பஹா), அஜித்குமார (காலி) ஆகியோர் தவிர பழைய முகங்கள் எல்லாம் கூண்டோடு 'அவுட்'. எனினும், ஜெனரல் சரத் பொன்சேகா (கொழும்பு), தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுனா ரணதுங்க ஆகியோரும் அக்கூட்டமைப்பில் தெரிவாகி அக்கூட்டமைப்பின் மானத்தை ஓரளவு காப்பாற்றியுள்ளனர். அந்த அணியின் தேசியப் பட்டியல் நியமனம் மூலம் அநுரகுமார திஸநாயக்க மீளவும் எம்.பியாவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோல விமல் வீரவன்ஸ அணியும் ஆளும் தரப்பில் இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி.நியமனங்களைப் பெற்று தனது உறுப்பினர்களான மொஹமட் முஸ்ஸமில், அச்சல ஜாகொட ஆகியோரை எம்.பிக்களாக்கக் கூடும்.

இதேசமயம், கடந்த நாடாளுமன்றத்தில் 9 உறுப்பினர்களைக் கொண்டிருந்த பௌத்த - சிங்கள பேரினவாதப் போக்குடைய கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் இம்முறை ஆளும் தரப்புடன் சேர்ந்து களத்தில் குதித்து ஆக இரண்டு இடங்களையே தக்கவைத்திருக்கின்றது. வண.அத்துரலிய ரத்னதேரர் (கம்பஹா), பட்டாளி சம்பிக்க ரணவக்க(கொழும்பு) ஆகியோரே அந்தத் தரப்பில் மீண்டும் எம்.பிக்களாகியிருக்கின்றனர். இதே சமயம் இந்த அணியைச் சேர்ந்த வண.எல்லாவல மெத்தானந்த தேரர், வண.ஒமல்பே சோபித தேரர் ஆகியோர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் எம்.பிக்களாகக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

''இனவாதம் பேசும் கட்சிகள், தரப்புகள் நாடாளுமன்றில் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றமை, இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் தேசிய இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் மற்றும் நியாயமான அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை எட்டுவதற்கு உகந்த சூழ்நிலையைத் தந்திருக்கின்றது'' - என்ற சாரப்பட சர்வதேச சமூகத்திலிருந்து இப்போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் இப்படி ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவை ஓரங்கட்டப்பட்டமையின் அடிப்படையில்தான் வெளிவருகின்றன.

இக்கட்சிகளின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் இனவாதம் பேசும் இக்கட்சிகளின் வலுவான தலைவர்கள் நாடாளுமன்றுக்கு மீண் டும் வருகின்றமை உறுதியாகியிருக்கின்றது.

ஆளும் கூட்டமைப்புக்குள் - ஆட்சிப் பீடத்துக்குள் - இத்தரப்பினரின் செல்வாக்கு எவ்வளவு தூரம் செல்லுபடியாகப் போகின்றது என்பதில்தான் எதிர்காலப் போக்குத் தங்கியிருக்கின்றது.

அரசுத் தலைமையை முழுப் பேரினவாதப் போக்கில் இழுத்துச் செல்லும் விடயத்தில் நாற்பதுக்கும் அதிகமான எம்.பிக்கள் இருந்து சாதிக்க முடியாததை நான்கு தலைவர்கள் இருந்து, செல்வாக்குச் செலுத்தி, சாதித்து விட முடியும் என்பதையும் கூட மறுப்பதற்கில்லை.

புதிய அரசின் போக்கு எப்படிப் போகப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மனோ கணேசனின் ஆதரவாளர்கள் மீது நாவலப்பிட்டிப் பகுதியில் நேற்றுத் தாக்குதல்!

கொழும்பு, ஏப்.16

கண்டி, நாவலப்பிட்டி கட்டபுலா மற்றும் ஹைட்ரீ ஆகிய இடங்களில் நேற்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மனோ கணேசனின் ஆதரவாளர்கள் மீது முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் அடியாள்கள் தாக்குதல் நடத்தினர் என்று மனோகணேசன் தெரிவித்தார்.

இத்தாக்குதலின்போது ஓட்டோ மற்றும் வான் ஆகிய வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன என்றும் தமது ஆதரவாளர்கள் இருவர் காயமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக மனோகணேசன் நேற்று 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

நாவலப்பிட்டி கட்டபுலா மற்றும் ஹைட்ரீ ஆகிய இடங்களில் எனது பிரசாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக எனது ஆதரவாளர்கள் அங்கே சென்றனர். அப்போது அங்கு வந்த முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் அடியாள்கள் எனது ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின் போது எனது ஆதரவாளர்கள் இருவர் காயமடைந்தனர். ஒருவரைக் காணவில்லை. இதனால் எனது பிரசாரக் கூட்டத்தை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திப்போட்டுவிட்டேன். இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு நான் பொலிஸ் மா அதிபரைத் தொடர்பு கொண்டேன். அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருக்கின்றார் என்று எனக்குத் தகவல் கிடைத்தது.

நான் எனது பாதுகாப்புக்காக மேலதிக பொலிஸாரைக் கேட்கின்றேன். மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டாலும் வழங்கப்படாவிட்டாலும் நாளை (இன்று) அந்த இடங்களில் நான் கூட்டத்தில் கலந்துகொள்வேன் - என்றார்.

# ஜே.வி.பியின் சார்பில் அநுரகுமார தேசியப் பட்டியல் எம்.பியாவார்?

கொழும்பு, ஏப். 16

ஜே.வி.பியின் முன்னாள் எம்.பியும் அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான அநுர குமார திஸாநாயக்க தேசிய பட்டியலின் ஊடாக எம்.பியாக நியமிக்கப் படவுள்ளார் என்று அக்கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகத் தேசிய முன்னணியின் கீழ் ஜே.வி.பி. போட்டியிட்டது.

காலி, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் தலா ஓர் ஆசனமும், கொழும்பில் இரண்டு ஆசனங்களுமாக 5 ஆசனங்கள் மாத்திரம் அக்கட்சிக்குக் கிடைத்தன.

அதன்படி, காலியில் அஜித் குமார, கொழும்பில் சரத் பொன்சேகா, சுனில் ஹந்துன்நெத்தி, களுத்துறையில் அர்ஜுன ரணதுங்க மற்றும் கம்பஹாவில் விஜித ஹேரத் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

தனது கட்சிக்கு போனஸ் ஆசனங்கள் இரண்டு கிடைக்கும் என்று ஜே.வி.பி. நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அவ்வாறு கிடைக்கும் ஆசனங்களில் ஒன்றின் ஊடாக அநுரகுமார திஸாநாயக்கவை எம்.பியாக்க ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது என்று கூறப்பட்டது.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம். ஏப். 16

நுணாவில் கிழக்கு, கல்வயல் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளைமறுதினம் ஞாயிறு ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடை பெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி சங்காபிஷேகமும் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று மறுநாள் திருக்கல்யாண வைபவத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (ஒ-207)

* * *

கொழும்புத்துறை. ஏப். 16

கொக்குவில் அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் 21ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறுவுள்ளது.

எண்ணெய்க்காப்புச் சாத்துதல் 19ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

அதேவேளை கும்பாபிஷேக தினத்தன்று பொற்பதி வீதி, முற்றாக மூடப்பட்டிருக்கும். பயணிகள் நந்தாவில் வீதி, கோணாவளை வீதி, புகையிரத நிலைய வீதி ஆகியவற்றைப் பயன்படுத்துமாறு நல்லூர் பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-135)

# அனார்கலியுடன் மோதியவர் இப்போது கீதாவுடன் மோதல்!

## நடிகைகளுடன் தர்க்கம் புரியும் முத்துஹெட்டிகம

கொழும்பு, ஏப்.16

கடந்த தென்மாகாணசபைத் தேர்தலில் ஆளும் தரப்பில் தன்னுடன் ஓரணியில் போட்டியிட்ட நடிகை அனார்க்கலியுடன் தேர்தல் சமயத்தில் கடும் மோதல்களில் ஈடுபட்டு பரபரப்பை ஏற்படுத்திய நிஷாந்த முத்துஹெட்டிகம, இந்தப் பொதுத் தேர்தலிலும் ஆளும் தரப்பில் தன்னுடன் ஓரணியாகப் போட்டியிட்ட நடிகை கீதா குமாரசிங்கவுடன் மோதல் களத்தைத் திறந்திருக்கின்றார்.

அந்த மாகாணசபைத் தேர்தலில் ஓரணியில் மோதிய இருவருமே - முத்து ஹெட்டிகமவும் அனார்க்கலியும் - வென்றிருந்தனர்.

ஆனால் நாடாளுமன்றத்தேர்தலிலோ முத்து ஹெட்டிகம தாம் போட்டியிட்ட காலி மாவட்டத்தில் ஆளும் தரப்பில் முதலாவதாகத் தெரிவானார். அவருடன் தற்போது மோதும் நடிகை கீதா குமாரசிங்வோ தோற்றுப்போயுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தான் தோல்வியடைவதற்குத் தன்னுடன் இணைந்து போட்டியிட்ட வேட்பாளர்களே காரணம் என்றும் இது தொடர்பில் தான் நீதிமன்றம் செல்லப் போகிறார் என்று நடிகை கீதா குமாரசிங்க தெரிவித்திருந்தார்.

வாக்குகள் எண்ணப்படும்போது தாம் முன்னிலையில் இருந்தார் என்றும் பிறகு சக வேட்பாளர்களின் சதியால் அது திரிபுபடுத்தப்பட்டு விட்டது என்றும் நடிகை குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள நிஷாந்த முத்துஹெட்டிகம, கீதா குமாரசிங்கவைக் கடுமையாகச் சாடியுள்ளார். கீதாவுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றிபெற்றவன் என்ற வகையில் கீதாவை நீதிமன்றில் சந்திக்கத் தான் தயார் என்றும் நிஷாந்த கூறியுள்ளார். (ஒ-சி)

# பளையில் தனியார் வீட்டில் இயங்கிவரும் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் சிரமம்

## அவசர நோயாளர்களை ஏற்றிச்செல்ல அம்புலன்ஸ் வசதி

யாழ்ப்பாணம், ஏப். 16

பளை வைத்தியசாலைக்குச் சுகாதாரத் திணைக்களத்தினரால் புதிய அம்புலன்ஸ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

பளைப்பகுதியில் மக்கள் மீளக் குடிமயர்ந்ததை அடுத்து தனியார் வீடொன்றில் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கி வருகிறது. தினமும் வைத்தியசாலைக்கு ஏராளமான நோயாளர் பெரும் சிரமத்தின் மத்தியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்களைச் சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்புவதற்காக அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் தற்போது நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் தினமும் பெரும் எண்ணிக்கையில் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருகை தருவதாகவும், ஏனைய பகுதிகளில் மீள்குடியமர்வு இடம்பெற்றதும் வெளிநோயாளர்கள் பிரிவுக்குத் தற்போது இயங்கும் கட்டட வசதிகள் போதாத நிலை ஏற்படலாமென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யுத்த அனர்த்தங்களால் பளை வைத்திய சாலை, பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவை முற்றாகச் சேதமடைந்து காணப்படுவதாகவும், அக்கட்டடங்களை விரைவில் புனரமைத்தால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை | 04 17.04.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : திருதியை |
| | மாலை 06.03 வரை |
| நட்சத்திரம் | : கார்த்திகை |
| | மு.இ. 07.02 |
| சுபநேரம் | : 03.04-04.34 வரை |
| ராகுகாலம் | : 09.04-10.34 வரை |

# சாவகச்சேரி இந்து மயானத்தில் இளைப்பாற்று மண்டபம்

## 18லட்சம் ரூபா செலவில் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஏப்,16

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் 18லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இளைப்பாற்று மண்டப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

1996ஆம் ஆண்டு தொடக்கம் இந்த மயானப்பகுதி அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து 2009இல் மயானப் பகுதி விடுவிக்கப்பட்டபோது மதில்கள், மண்டபம் ஆகியவை பலத்த தேசங்களுக்கு இலக்காகியிருந்தன. அதனைத் தொடர்ந்து வடக்கில் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மயானம் புனரமைப்புச் செய்யப்பட்டு, மண்டபமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலுதவியாளர் தேவை (Paramedic)

மேற்படி பதவிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

★ க.பொ.த. உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு விரும்பத்தக்கது

★ வயதெல்லை 20-35 வரை

விண்ணப்ப முடிவுத்திகதி - 18.04.2010 (ஞாயிறு)

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

DANISH DEMINING GROUP

அலுவலக முகாமையாளர்,
டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு,
இல. 456, பிரதான வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### துரைராஜா சுகிர்தாநாத்

(விஞ்ஞானமாணி BSc (Hons) Eng

கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 25.02.2010 ஆம் திகதி பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணி(BSc (Hons) Eng பட்டம் பெற்றுக் கொண்டதனை மனதாரப் பாராட்டி சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா- Dr.க.வே.துரைராஜா, அம்மா-து.பரமேஸ்வரி, மாமா- இ.முருகானந்ததாஸ், அக்கா-மு.வாசுகி (MPAFinan), அண்ணா- Dr.து.கோபிநாத் (HNDA), தம்பிமார்களான- து.கோகுல்நாத் (Q.S), து.ராகவநாத், பெரியப்பாமார் குடும்பங்கள்.

முத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(97055)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற



செல்வி.
அல்பிரட் மரியதாஸ் யூட் ஜெயசீலி
(கலைமாணி-B.A.(Hons)



செல்வி.
தேவசகாயம் சுயந்தினி
நுண்கலைமாணி-B.F.A.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வருடம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கணக்கியலில்HNDA பட்டம் பெற்ற



செல்வி
வென்சிலாஸ் சுபாஷினி
B.A., HNDA

ஆகியோர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

புனித அந்தோனியார் ஆலய மக்கள்,
புனித அந்தோனியார் சனசமூக மன்றம்,
அதனோடு சார்ந்த நிறுவனங்கள்.
4ஆம் குறுக்குத்தெரு,பருத்தித்துறை.

## A/L வரலாறு - 2012

* மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் வரலாற்றுப் பாடத்தில் உயர் பரிசில்களைப் பெறச் செய்த உங்கள் ஆசான்.
* யாழில் தொடர்ச்சியான அதிகூடிய "A" தரச்சித்திகளைப் பெறச் செய்த உங்கள் ஆசான்.
* யாழில் அதிக மாணவர்களுக்கு வரலாறு கற்பிக்கும் உங்கள் ஆசான்.

**M. பத்மன் B.A (Hons) His Spl M.A**

அவர்களின் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்

D.M.I
ஸ்ரான்லி வீதி.

உயர்கலைக் கல்லூரி,
குளப்பிட்டிச்சந்தி.

BITSMANS
மானிப்பாய்

New A.A.C
சுன்னாகம்.

"ஒழுக்கம், கட்டுப்பாடு, வெற்றி"

2012இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படும்.

(97067)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் முருகேசு சின்னம்மா



தோற்றம் 05.11.1924 மறைவு 17.03.2010

கடந்த 17.03.2010 புதன்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் அன்றையதினம் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

(சி/566594)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இரு இடத்திலும்) சனி - ஞாயிறு கே.கே.எஸ் வீதி, இணுவில்

**A/L - 2012**

கலை, வர்த்தகப்பிரிவுகள்

மீண்டும் ஒரு புதிய பிரிவு

ஆரம்பம் :- நாளை (17.04.2010) சனி 8A.M.

உங்கள் அனுமதிகளை இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:- எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் ஆரம்பமாகின்றது.

அங்கும் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி/566588)

## விற்பனைக்கு

6½ மாதம் நிரம்பிய நல்ல பராமரிப்பில் உள்ள பொக்ஸர் (BOXER) பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0779222157 (சி/566586)

## தேவை

கன்ரர் வாகனச் சாரதி 45 வயதிற்குமேல் யாழ். மாநகர எல்லைக்குட்பட்டோர் தேவை. A.D.லைசன்ஸ்

தொடர்பு : 0779352351 (சி/566582)

## வேலையாள்கள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பொதி செய்வதற்கு பெண்கள் தேவை.

தொடர்பு: 146, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். தொ.பே. 0776071675 (97062)

## லம்போ கிளினிக்

மீண்டும் யாழ்.மண்ணில் Dr. திருமதி நாகேந்திரா அவர்கள் நோயாளர்களை 15.04.2010இலிருந்து பார்வையிடத் தொடங்கியுள்ளார்.

இல 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (97051) நிர்வாகி.

## சிரேஷ்ட கணக்காளர் பதவி வெற்றிடம்

கொழும்பிலுள்ள பிரபல பத்திரிகை நிறுவனமொன்றுக்குத் தகுதியும், அனுபவமும் வாய்ந்த சிரேஷ்ட கணக்காளர் ஒருவர் தேவை.

உயர் கணக்கியல் தகைமை, அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் ஏழு தினங்களுக்குள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமைப் பணிப்பாளர்,
இல. 70, டேவிட்சன் வீதி,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
(பக்ஸ் இல. 2506610)

## தவறிவிட்டது

கந்தரோடை, சுன்னாகம் என்னும் முகவரியையுடைய ஜெயக்குமாரன் இராஜீவன் என்பவரது தே.அ.அ (892970963V), சாரதி அனுமதிப் பத்திரம் போன்ற ஆவணங்கள் அடங்கிய கைப்பை, மானிப்பாய் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி/566584)

## தவறிவிட்டது

மாசுவன் சந்தி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பிறேமகுமார் என்பவரது தே.அ.அ. (821681448V) யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்குமிடையே தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மேல் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும்.

தொ.பே. 0773276487 (சி/566585)

## பதவி வெற்றிடம்

பிரபல காப்புறுதி நிறுவனம் ஒன்றுக்கு காப்புறுதி ஆலோசகருக்கான குறிப்பிட்டளவு வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: 0778330189 (94063)

## தவறிவிட்டது

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த சாந்திக்குமார் பபிசன் என்பவருடைய தே.அ.அ. (922760810V) கோண்டாவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தபேஷன் விவசாய மாளிகை,
பலாலி றோட், கோண்டாவில் சந்தி.
தொ.பே. 0771870630. சன்மானம் வழங்கப்படும்

(சி/566553)

## தவறிவிட்டது

இல. 23, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சற்குணராசா சாரங்கன் என்பவரது தே.அ.அ. (902702008V) HALO Trust I.C., ATM Card என்பன கைப்பையுடன் மனோகராச் சந்திக்கும் ஒட்டுமடம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். அல்லது [illegible] எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/566581)

## சோதிடம்

இந்தியாவில் புகழ்பெற்ற சோதிடர் எட்டயபுரம் எஸ். சந்திரபோஸ் அவர்களால் ஜாதகம், கைரேகை, பொருத்தம் மற்றும் அனைத்து சோதிடங்களும் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும்.

காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை பார்க்கப்படும்.

தொடர்பு : 0778752163

414, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(96826)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் க.எழில்மகன் அவர்களின் அன்புப் பேரன்

### வீரகத்தி சுப்பிரமணியம்

அவர்கள் இறைபதம் எய்தியமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை, கொடிகாமம். 97065

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் திருமதி சாந்தகோகிலம் பஞ்சலிங்கநாதன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி முத்துத்தம்பி இராசலட்சுமி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம். (97064)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி தர்சிகா நாகராஜா

ஆஸ்பத்திரி வீதி, மூளாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்சிகா நாகராஜா நேற்று (15.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சோமசுந்தரம் நாகராஜா (சாரதி, UNDP, Mine Action, உரிமையாளர், மோட்டார் மெக்கானிக் சொப், பண்டத்தரிப்பு), வனமளா தம்பதியினரின் அன்பு மகளும், V.K.சுப்பிரமணியம், தையல்முத்து, காலஞ்சென்ற சோமசுந்தரம், சரஸ்வதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கோபிகா (உடுவில் மகளிர் கல்லூரி), தனராஜ் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, மூளாய். தொ.பே. 0214906500 (97059)

தகவல்
குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்



(ஸ்கந்தா பழைய மாணவனும், உதைபந்தாட்ட வீரரும்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உடுவில் காளிகோவிலடியையும் தற்பொழுது லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் 14.04.2010 புதன்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (மலேயன் பென்சனியர்) மற்றும் பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சூரியகுமாரி (பேபி)யின் அன்புக் கணவரும், வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதாகர், சுகந்தி, சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

காளிகோவிலடி,
உடுவில், சுன்னாகம்.
தொ.பே. 0213210090 (97069)

தகவல்
திருமதி க.பாக்கியம் (தாய்),
சகோதரர்கள்.

### வல்லிபுரம் செல்லத்துரை



(ஓய்வு பெற்ற நோக்கணிப்பாளர், பரிசோதகர், பருத்தித்துறைச் சாலை)

துன்னாலை, இந்திரன் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை காலமானார்.

அன்னார் தேவரத்தினத்தின் அன்புக் கணவரும், செல்வரஞ்சிதத்தின் பாசமிகு தந்தையும், சந்திரப்பிரகாசம் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மாமனாரும், நிறைஞ்சன் (சட்டத்தரணி), சாபேசன் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும், மைதிலி (ஆசிரியை பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி), பாமினி ஆகியோரின் அன்புப் பேரனும், காருண்ஜா, யுகப்பிரியன், சுஜிப்பிரகாஸ் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30மணியளவில் குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'ரஞ்சி இல்லம்',
இந்திரன் அம்மன் கோயிலடி. (சி/566600)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளை அகலமாக்கும் போது காணிகளை இழக்கும் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்டத்திலுள்ள முக்கிய வீதிகளை அகலமாக்கும் நடவடிக்கைகளின் போது, பாதிக்கப்பட்டு காணிகளை இழக்கும் உரிமையாளர்களுக்கு நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் பொருளாதார, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்குப் பொறுப்பான துணைச் செயலாளர் சி.வீ.கே.சிவஞானம் யாழ்.அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முக்கிய வீதிகளை விசாலமாக்கி அகலிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதே. எனினும் இந்த விசாலிப்பு நடவடிக்கைகளின் போது, பாதிக்கப்பட்டு காணிகளை இழக்கும் உரிமையாளர்களுக்கு, உதாரணமாக பருத்தித்துறை வீதி விசாலிப்பு, நட்டஈடு எதுவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாமை வருத்தத்திற்குரியது.

எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படியும், பத்திரிகைச் செய்திகளின்படியும், தென்னிலங்கை வீதி விசாலிப்பு நடவடிக்கைகளின் போது காணி இழப்பு மற்றும் கட்டட இழப்புகளால் பாதிக்கப்படுவோருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உதாரணமாக பாதெனிய - அனுராதபுரம் வீதி அகலிப்பை குறிப்பிடலாம்.

தென்னிலங்கையில் நட்டஈடு வழங்குகையில் யாழ்ப்பாணத்தில் நட்டஈடு வழங்கப்படாமை பாரிய பாகுபாட்டு செயற்பாடாக பார்க்க வேண்டியுள்ளது.

எனவே இந்த விடயத்தை மீளாய்வு செய்து, எமது பகுதி வீதி அகலிப்புகளால் பாதிக்கப்படுவோருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது. (50)

## வந்தனர்; அள்ளினர்; சென்றனர் மவுண்கார்மல் வீதி இப்போது 'பளிச்'

வண்ணை,ஏப்.16

நேற்றைய (15.04.2010) உதயன் பத்திரிகையில் 3ஆம் பக்கத்தில் குருநகர் மவுண்கார்மல் வீதிப் பகுதியில் கடந்த நான்கு வாரங்களாக குப்பை கூளங்களை அகற்ற 'டிப்பர்' வானங்கள் வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பயனாக நேற்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு முன்பதாகவே குப்பை ஏற்றும் உழவு இயந்திரத்தில் வீதிகள் மற்றும் வீடுகளில் இருந்த அனைத்து குப்பை கூளங்களும் எடுத்துச் செல்லப்பட்டதால் அந்த இடங்கள் துப்புரவாகக் காணப்பட்டது.

தம்முடைய பிரச்சினையை உடனடியாகவே வெளிப்படுத்தி பரிகாரம் தேடித் தந்த உதயனை இப்பகுதி மக்கள் மனதார வாழ்த்தினர். (4-160)

## மாற்று வலுவுள்ளோர் விவரணப் படம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

மாற்று வலுவுள்ளோருக்கான புனர்வாழ்வுச் சேவை தொடர்பான விழிப்புணர்வு விவரணப் படம் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தசாப்தங்களாக வலுவிழந்தோருக்கு பல்வேறு பணிகளை ஆற்றி வரும் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தற்போதைய சூழ்நிலையில் புனர்வாழ்வுச் சேவை தேவைப்படும் மாற்று வலுவுள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சமுதாயத்தில் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மேற்படி விவரணப் படத்தை தயாரித்துள்ளது.

இந்த விவரணப் படத்தைப் பார்வையிட விரும்பும் சமூக நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளுமாறு ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (04-16)




## 513ஆவது படைப் பிரிவின் புதுவருடக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கின் பனை மரநிழலில் 513 ஆவது படைப்பிரிவினரால் நடத்தப்படும் 2010 தமிழ்,சிங்களப் புத்தாண்டுப் பண்டிகைக் கொண்டாட்டம் நாளை சனிக்கிழமை சுன்னாகம் பிரதேச சபை விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆண், பெண் இருபாலருக்குமான சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, முட்டி உடைத்தல், புதுவருட அழகு ராணித் தெரிவு உட்பட பல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

கொக்குவில் இன்னிசைக் குழுவுடன், படையணிக் கலைஞர்கள் பங்கு பற்றும் இசை நிகழ்வும் இடம் பெறும். (50-23)

## நகைகளை எடைபார்க்கும் கருவிகளுக்கும் முத்திரையிடப்படும்

தங்க நகைகளை எடைபார்க்கும் நிறுத்தல் அளவைக் கருவிகளும் கட்டாயம் வருடா வருடம் முத்திரையிடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடுவதற்காக பல லட்சம் ரூபா பெறுமதியான டிஜிற்றல் கருவி ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளது.

தங்க நகைகளை எடைபார்க்கும் நிறுத்தல் அளவைகள் இந்த டிஜிட்டல் கருவி மூலம் முத்திரையிடப்படும் என நிறுத்தல் அளவைகள் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (04-224)

## முற்றவெளியை மீண்டும் மூடியுள்ள பொலித்தீன் பைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். முற்றவெளிப் பகுதி மீண்டும் பொலித்தீன் பைகளால் நிரம்பி அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றது.

அண்மையில் இப்பகுதியில் நிரம்பி வழிந்த பொலித்தீன் பைகள் யாழ். மாநகர சபைத் தொழிலாளர்களால் கூட்டி அள்ளப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருந்தன. இதன் பின்னர் 'பளிச்' சென்றிருந்தது முற்றவெளிப்பகுதி எனினும் கடந்த சில நாள்களாக பொலித்தீன் பைகள் மீளவும் முற்றவெளிப் பகுதியை முழுமையாக ஆக்கிரமித்துள்ளன. (04-224)

## துப்புரவு செய்யப்பட்ட குளத்தில் மீண்டும் படரும் சல்பீனியா!

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.நகரில் வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகாமையில் இருக்கும் குளத்தில் சல்பீனியா தாவரம் மீண்டும் பல்கிப் பெருகி படர்ந்த நிலையில் காணப்படுகின்றன.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இந்தக் குளம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டது. குளத்தில் இருந்த சல்பீனியா தாவரம் மற்றும் புற்கள், கழிவுகள் என்பன அகற்றப்பட்டு புதுப்பொலிவுடன் இக்குளம் காட்சியளித்தது.

ஆயினும் தற்போது திடீரென சல்பீனியாத் தாவரம் படர்ந்து குளத்தையே முற்றாக மூடியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. (04-224)

## சில்லறை நாணயக் குற்றிகளுக்கும் தாள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.குடாநாட்டில் சில்லறை நாணயக் குற்றிகளுக்கும் நாணயத் தாள்களுக்கு பெரும் தட்டுப்பாடும், கிராக்கியும் நிலவி வருவதாகக் கூறப்படுகின்றது.

10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா, 100 ரூபா போன்ற சில்லறை நாணயத் தாள்களுக்கும் ஒரு ரூபா, 2ரூபா, 5 ரூபா நாணயக் குற்றிகளுக்குமே இவ்வாறு பற்றாக்குறை நிலவி வருகின்றது.

கூடுதலாக 10 ரூபா, 20 ரூபா நாணய தாள்கள் கிடைக்காமல் மக்கள் பெரும் சிரமப்பட்டனர்.

சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்தை மேற்கொள்வதற்கு மக்களுக்கு மிகுதிப் பணத்தை வழங்குவதற்கு சில்லறை நாணயத் தாள்கள் இன்றி வர்த்தகர்கள் பெரும் சிரமப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. சில வர்த்தக நிலையங்களில் மிகுதிப் பணம் வழங்க நாணயக் குற்றிகளும், தாள்களும் இல்லாமையில் அதற்குப் பெறுமதியான இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன.

சித்திரைப் புத்தாண்டுக்காக கைவிசேடம் வழங்குவதற்கும் சில்லறை நாணயக் குற்றிகளும், தாள்களும் இன்றிப் பொது மக்கள் சிரமப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (04-224)

## ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை - 2009; சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பி வைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

நி.நிறோஜினி - 6ஏ,3பி, க.கிருஜிகா - 6ஏ,2பி,சி, ப.வானதி - 4ஏ,4பி,சி, நி.கார்திகா - 4ஏ,4பி,சி, ந.நாகதர்சினி - 4ஏ,3பி,2சி, இ.மேருசா - 4ஏ,2பி,3சி, பா.பிரியங்கா - 4ஏ,4சி,எஸ், ர.மயூரி - 4ஏ,3பி,2சி, சி.மேரிஸ்ரெல்லா - 4ஏ,2பி,3சி, ஆ.டயாலினி - 4ஏ,3பி,2சி, கு.பைரவி - 4ஏ,2பி,3சி, ப.பிருந்தினி - 4ஏ,பி,2சி,2எஸ், சி.துர்க்கா - 4ஏ,3சி,2எஸ், இ.விேனா - 3ஏ,4பி,2சி, பு.சுகன்யா - 3ஏ,4பி,2சி, த.சுகன்யா - 3ஏ,4பி,2சி, ஜீ.சர்மிளா - 3ஏ,2பி,2சி,எஸ், சி.சசீந்தினி - 3ஏ, 3பி,2சி,எஸ், பா.கேமலதா - 3ஏ,2பி,3சி, எஸ், இ.சியாமினி - 3ஏ,3பி,3சி, நா.காமினி - 3ஏ,3பி,3சி, ஸ்ரீ.லக்சனா - 3ஏ,பி,சி,4எஸ்

**உசன் இராமநாதன் ம.வி.**


சி.கனிஸ்ஷா - 8ஏ,பி, யோ.விதுஷன் - 7ஏ,2பி, து.பிரபானந்தி - 3ஏ,2சி,2எஸ், மா.சர்மிலன் - 2ஏ,4பி,சி,2எஸ், த.வித்தியா - 2ஏ,பி,2சி,3எஸ், ச.தர்சினி - 2ஏ,2சி,2எஸ், வ.தர்சிகா - ஏ,2பி,சி,2எஸ், ச.நியோசன் - ஏ,பி,3சி, 3எஸ்.

**வேலணை மத்திய கல்லூரி (நவோதயா பாடசாலை)**

து.தனுசன் - 7ஏ,சி,எஸ், சி.சாரங்கா - 4ஏ,2பி,2சி,எஸ், ஜெ.ஜெசிந் - 3ஏ,2பி,3சி,எஸ், ஜெ.மைதிலி - 3ஏ,பி,2சி,3எஸ், ச.கஸ்தூரி - 3ஏ,பி,2சி,3எஸ், ந.கவிதரன் - 3ஏ,பி,4சி, ந.தர்சிகா - 2ஏ,4பி,சி,எஸ், அ.பத்மலோஜினி - 2ஏ,2பி,சி, 3எஸ்,மு.பவித்திரா - 2ஏ,2பி,சி,எஸ், ஈ.சிறீவதனா - 2ஏ,பி,4சி,2எஸ், சி.திவ்யா - 2ஏ,2பி,சி,4எஸ், வ.சாய்மீரா - 2ஏ,பி,2சி,3எஸ், இ.பிரதீபா - 2ஏ,2சி,2எஸ்

**கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்**

எஸ்.திலீப் - 5ஏ,பி,2சி,எஸ், எஸ்.கஸ்தூரன் - 4ஏ,2பி,2சி,எஸ், ரி.கம்சத்வனி - 4ஏ,பி,2சி,2எஸ், ஜெ.மதிவதனி - 3ஏ,3பி,3சி, கே.கிருஸ்ணமேனன் - 3ஏ,பி,4சி,எஸ், பி.கவிதா - 2ஏ,பி,4சி,2எஸ், ரி.கோடீஸ்வரன் - 2ஏ,பி,4சி, ரி.தர்சிகன் - 2ஏ,பி,2சி,4எஸ், கே.சங்கீர்த்தனன் - 2ஏ,சி,3எஸ், எஸ்.கஜீபன் -ஏ,3பி,4சி,எஸ், எஸ்.பவிதா - ஏ,3பி,2சி,2எஸ், பி.பிரதீபன் - ஏ,2பி,5சி,எஸ், பி.ஜிந்துஜா - ஏ,2பி,3சி,2எஸ்,ஆர்.பிரசாந்தி - ஏ,2பி,சி,2எஸ், எஸ்.நிலானி - ஏ,பி,2சி,3எஸ்,



சமூகவியல் சமூகத்தின் அனுசரணையில் எழுத்தாளர் சட்டநாதனின் முக்கூடல் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறையைச் சேர்ந்த ந.மயூரரூபன், நூலாசிரியர் க.சட்டநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் இரு படங்களிலும் - நூலின் முதற் பிரதியை [illegible] பெற்றுக் கொள்வதையும் அருகில் சமூகவியல்துறைத் தலைவர் கோ. [illegible] படத்தில் காணலாம்.

(படங்கள் : லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் மர்மமான வெற்றிடத்தால் ஈழத்தமிழர்களுக்கு விரைவில் விடிவு கிடைக்கும்

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மூத்த சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன். அவர் தற்போது டென்மார்க்கில் குடும்பத்துடன் வசித்து வருகின்றார்.

டென்மார்க்கிலுள்ள அலைகள் நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வேலுப்பிள்ளை மனோகரன் முதன்முறையாகத் தலைமை ஏற்று கருத்துரையாற்றவுள்ளார். புதுமாத்தளன் போருக்குப் பின்னர் பிரபாகரன் குடும்பத்தில் இருந்து ஒருவர் மேடைக்கு வருவது பலரையும் எதிர்பார்ப்புக்குள்ளாகியுள்ளது. அலைகள் இணையத்தளத்திற்கு அவர் வழங்கிய செவ்வியில் இரண்டாவது பகுதி இங்கே.

*கேள்வி : உங்கள் தம்பி வே.பிரபாகரனை எங்கே தேடுவது ?*

மனோகரன் : பிரபாகரனை இரண்டு வழிகளில் தேடுகிறார்கள். ஒரு சிலர் அவரை விண்ணில் தேடுகிறார்கள், இன்னும் சிலர் மண்ணில் தேடுகிறார்கள். ஆனால் பிரபாகரன் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் உடல்களில் வீசும் விடுதலைப் பேரொளியாக இருக்கிறார் என்பது தான் உண்மை. அந்தத் தேடலுக்கான பதிலை தருவதற்குத் தகுதியுள்ள ஒருவரை விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து அவர் இதுவரை அடையாளம் காட்டவில்லை என்பதை இனியாவது மக்கள் அறிவால் கண்டு பிடிக்க வேண்டும்.

*கேள்வி : விடுதலைப்புலிகள் அமைப் பின் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான பணிகளைத்தானே செய்வதாகக் கூறிய கே.பத்மநாதன் அத்தருணம் உங்களிடம் என்ன கூறினார்?*

மனோகரன் : கே.பி. ஊடகங்களில் தோன்றி ஒரு தடவை இறந்துவிட்டதாகவும், இன்னொரு தடவை உயிருடன் இருப்பதாகவும் கூறினார். அவர் மற்றவரில் இருந்து சற்று வித்தியாசமாக விண்ணிலும் மண்ணிலுமாக இரண்டு இடங்களிலும் தேடியிருந்தார். இப்படி இரண்டுங்கெட்டான் பதிலைப் பிரபாகரன் தனது வாழ்வில் என்றுமே கூறியது கிடையாது. கே.பியின் கடமை என்ன. பிரபாகரனின் உடன் பிறந்த அண்ணன் நான் இருக்கிறேன். என்னிடம் ஒரு தடவை கூட அவர் இது குறித்துப் பேசியது கிடையாது.

*கேள்வி : வேறு யாராவது தொடர்பு கொண்டார்களா ?*

மனோகரன் : தமிழகத்தில் இருந்து பழ.நெடுமாறன் ஒருவர் மட்டும் தொடர்பு கொண்டு பிரபாகரன் இருக்கிறார் என்ற செய்தியை அறிவிப்பதாகக் கூறினார். மற்றப்படி யாருமே இது குறித்து என்னுடன் இன்றுவரை பேசியது கிடையாது. ஒருவரிடமும் இந்தக் கேள்விக்கு பதில் இல்லை.

*கேள்வி : அப்படியானால் இந்தக் கேள்விக்கான பதிலை எங்கிருந்து தேடுவது?*

மனோகரன் : பிரபாகரன் வாழ்வில் இருந்துதான் தேடிக் கொள்ள வேண்டும். நான் உங்களிடம் முன்னரே குறிப்பிட்டிருந்தேன் என் தம்பி எல்லாள மன்னன் சமாதி இருந்த இடத்தில் கருவுற்றவர் என்று. அதுபோலவே மானமுள்ள தமிழுக்காகவும், உயர் தமிழ் வீர ஒழுக்கத்திற்காகவும் அவர் வாழ்ந்தார். சங்ககாலப் பாடல்களில் கண்ட உயர்ந்த அப்பழுக்கில்லாத வீரத்தை எல்லாள மன்னன் போற்றினான். தள்ளாத வயதிலும் உயிரச்சமின்றி தனிச்சமருக்குப்போன வீரன் எல்லாளன். அதுபோல பிரபாகரன் உருவாக்கிய விடுதலை வீரர்கள் அனைவருமே இருபதாம், இருபத்தியோராம் நூற்றாண்டுகளில் சங்ககால வீர வாழ்வை வாழ்ந்தார்கள். புறநானூற்றில் கண்ட வீரத்தை நிஜ வாழ்வியல் ஓவியங்களாக மாவீரர்களை வைத்தே வரைந்தும் காட்டினார். இயற்கையாகவே பிரபாகரன் ஓர் ஓவியர் என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவேதான் அவர் வாழ்வும் புறநானூற்று தமிழ் வீர வாழ்வும் ஒன்றுதான் என்பதைப் புரிய வேண்டும்.

*கேள்வி : இது அவர் வாழ்வின் முற்பகுதிவரை நகர்ந்து போகும் நிகழ்வு. எதிரிகளின் நீரைக் குடித்து உயிர் வாழாத சேரன் செங்குட்டுவனின் வீரம் திலீபனிடம், திருமணமான அன்றே போருக்குப் போன புறநானூற்று வீரம் குமரப்பாவிடம் என்று சுத்தமான தமிழ் வீரத்தை அவர் படைத்தார். கரிகாலன் என்ற பெயருடன் அவர் வாழ்ந்த வாழ்வு எங்களுக்கும் தெரியும், இருப்பினும் அவருடைய வாழ்வின் பிற்பகுதி புறநானூற்றின் இறுதிப்புள்ளியின் தாக்கம் தெரிகிறதே.*

மனோகரன் : கடைசியில் நடைபெற்ற புதுமாத்தளன் போர்க்களமும் மாங்குடி மருதனார் பாடிய சங்க காலப் போர்க்களமும் வேறு வேறல்ல. வெட்டி எடுக்கப்பட்ட முடித்தலைகள் அடுப்பாக. பிளக்கப்பட்ட கபாலங்கள் பாத்திரமாக. அதற்குள் இரத்தமும் சதையும் நிணமும் இட்டு, வெட்டிய கைகளை அகப்பையாக. துளாவி ஒரு போர் யாகம் நடத்தினான் பாண்டிய மன்னன் என்று பாடியுள்ளார்கள். அதைத்தான் புதுமாத்தளனில் கண்முன் கண்டு துடி துடித்தோம். உண்மையில் அது புறநானூற்றுப் போர்க்களம்தான்.

*கேள்வி : இருக்கலாம் இருந்தாலும் இப்போது உருவாகியுள்ள நிலை புறநானூற்றில் இருந்து சிறிது வேறுபடுகிறதே? வெற்றிடத்தால் ஒரு போர் என்ற புதிய கோட்பாடு தெரிகிறது. உங்களுக்கு அது தெரிகிறதா ?*

மனோகரன் : உங்கள் கேள்வி எனக்குப் புரிகிறது. வெற்றிடத்தால் ஒரு போர் அதற்கான பதில் அவர் படித்த நூலில் இருக்கிறது. ஒரு மனிதனின் நல்ல நண்பன் அவன் படிக்கும் நல்ல நூல்தான் என்று கூறுவார்கள். பைபிள் படித்தவர்கள் பைபிள் போலவே வாழ முயற்சிப்பதும், மார்க்சியம் படித்தோர் மார்க்சிய வாதிகளாக வாழ்வதும் ஏன். அவர்கள் படித்த நூலின்படி வாழ முயற்சிக்கிறார்கள் என்பதே அதன் பொருளாகும். அதுபோலத்தான் பிரபாகரனும் வாழ்வின் வேதமாக நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் வாழ்க்கையை கடைப்பிடித்தார். நேதாஜியின் கடமை உணர்வு மிக்க, ஒழுக்கம் குறையாத ஓர் இராணுவத் தொண்டர்களை அவர் வடிவமைத்தார். நேதாஜியின் இறுதிக்கரலத்தில் அவர் எங்கே என்ற கேள்விக்கு பதில் இல்லாமல் போனது. இப்போது பிரபாகரன் விரும்பிப் படித்த நேதாஜியின் வாழ்வியல் தத்துவம் வில்லை. ஏன் உடனடியாக எரியூட்டினார்கள்;? இப்படியான குழப்பகரமான நிலையில் நாம் மட்டும் ஓடிச்சென்று பொறுப்பேற்றால் என்ன நடக்கும்? தவறான ஓர் உடலத்தைக் காட்டி நாமே அதை உறுதி செய்துவிட்டதாக அரசு பிரசாரம் செய்யும். அத்தகைய பொறிக்குள் சிக்குண்டால் அது பெரிய முட்டாள் தனமான செயலாக அல்லவா முடியும் ? அதைத்தான் விடுங்கள். எனது தந்தை இருக்குமிடத்தை அவர் இறக்கும்வரை ஏன் சிறீலங்கா அரசு இரகசியமாக வைத்திருந்தது? இப்படிப்பட்ட சிறீலங்கா அரசு நம்பிக்கைக்குரியது என்று கருதுகிறீர்களா ? சிறீலங்காவின் கதை கேட்டு, இந்தியாவிலேயே ப.சிதம்பரம் ஒருவிதமாகவும் சி.பி.ஐ இன்னொரு விதமாகவும் அறிக்கை விட்டதை நீங்களும் அவதானித்திருப்பீர்கள். இதை எல்லாம் தொகுத்துப் பார்த்தால் அன்று நாம் ஏன் உரிமைகோரத் தயங்கினோம் என்ற கேள்விக்கான நீதியுடைய பதில் உங்கள் உள்ளத்தில் உருவாகும்.

*கேள்வி : சரி அதற்குப் பிறகு வருகிறோம். உங்கள் சகோதரன் பிரபாகரன் உங்களுடன் தொடர்பு கொள்வதுண்டா..?*

மனோகரன் : ஆம். அவர் போர் இறுக்கமடைவதற்கு முன்னர்வரை என்னுடன் தொடர்பில் இருந்தார். குறித்துக்கொள்ளுங்கள். குடும்ப விவகாரங்களை மட்டும் என்னுடன் பேசிக் கொள்வார். சாள்ஸ் சிறந்த முறையில் படித்து எட்டுப்பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று, கட்டுப்பெத்தை தொழில் நுட்பக்கல்லூரிக்கும் தேர்வானபோது அந்த மகிழ்வை சொல்ல எடுத்தார். இப்படி குடும்பத்தின் ஒவ்வொரு நல்ல நிகழ்வையும் அவர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்.. வாழ்வு - தாழ்வு - இன்பம் - துன்பம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டார்..

*கேள்வி : புதுமாத்தளன் சம்பவங்கள் நடைபெற்றபோது அவர் உங்களுடன் தொடர்பு கொள்ளவில்லையா..*

மனோகரன் : தொடர்பு கொள்ளவில்லை. குடும்பத்தின் நன்மை தீமைகளைப் பேசியவர். சாள்ஸ் இறந்தாகக் சென்றார்கள். அவர்கள் டென்மார்க்கில் பிளாஸ்டிக் பையில் செய்யப்பட்ட மிக மிக விலை குறைந்த 100 குறோணர் விலையுள்ள ஒரு தண்ணீர் தொட்டியை கொண்டு சென்று



கொடுத்தார்கள். அது தான் சிறீலங்கா அரசு பிரசாரம் செய்த ஆடம்பர வாழ்வு. அதைத்தான் நம் தமிழ் உறவுகளும் இணையங்களில் போட்டு பிரசாரம் செய்தார்கள். ஒரு தூய போராளியின் வாழ்விற்கும் தனது வாழ்விற்கும் இடையில் யாதொரு வேறுபாட்டையும் அவர் வைக்கவில்லை. அந்தப் பிரசாரங்களை எல்லாம் இன்று பிரபாகரன் முறியடித்துவிட்டார்.

*கேள்வி : சரி. பிரபாகரன் இருக்கிறார். அவர் தற்போது வெளிப்படவில்லை. என்று வைத்துக் கொள்வோம். இந்த நிலையில் யார் பேச்சைக் கேட்பது? இப்போது எண்ணற்ற தலைவர்கள் தோன்றி விட்டார்களே?*

மனோகரன் : பிரபாகரன் தனக்குப் பின் யாரென ஒருவரைத் தெரிவு செய்திருந்தால் இப்படி பெருந்தொகையானவர்கள் தோன்றியிருக்கமாட்டார்கள். அவர்கள் தாமே பிரபாகரனின் குரல் என்றும் கூறியிருக்கமாட்டார்கள். இப்போது பிரபாகரன் எடுத்த பணிகளை நாமே தொடர்கிறோம் என்று கூறும் யாரிடமும் அவர் எங்கே என்ற கேள்விக்கு பதில் இல்லை. ஆகவே இவர்கள் அனைவரும் பிரபாகரனின் தேர்வில் இல்லாதவர்களே என்பது தெளிவு. பிரபாகரனின் உண்மையான உறுதியான குரல் இன்னமும் வரவில்லை.

*கேள்வி : வட்டுக்கோட்டைத் தீர்மானம். வாக்கெடுப்பில் உள்ளதே.*

மனோகரன் : வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது அன்றைய தமிழர் கூட்டணியினரால் எழுதப்பட்ட ஒரு காகிதத் தீர்மானம். அதனடிப்படையில் தாயகத்தில் ஒரு தேர்தலும் நடைபெற்று முடிந்து விட்

## அரசு காண்பித்தது பிரபாகரனின் உடல் என்றால் அதனை ஏன் உடனடியாக எரியூட்ட வேண்டும்?

அவரை வழி நடத்தியிருப்பது தெரிகிறது. இது புறநானூற்றில் இருந்து வேறுபட்ட இடமாகும். நேதாஜி கதை படித்து, அவர் வாழ்வின் பிற்பகுதி போன்ற தோற்றத்தை கடந்த ஓராண்டு காலமாக வைத்திருக்கிறார் பிரபாகரன். அதிலும் ஒரு போராட்டம் மறைந்திருக்கிறது. அதுதான் புதிய புறநானூற்றின் அதிசயமான பக்கம். அதற்குப் பிறகு வருகிறேன். தாயின் மணிவயிற்றில் கருவாக இருக்கும்போது பாரதக்கதை கேட்டு போர் வீரனானான் அபிமன்யு. அது போல எல்லாளன் கதையை தாயின் வயிற்றில் இருக்கும்போதே கேட்டு அவர்போல தமிழ் வீரரானார் பிரபாகரன் என்று முன்னர் கூறியிருந்தேன். பின்னர் மறுபகுதியை கூறுகிறேன்..

*கேள்வி : சரி நம்மை விடுங்கள். மத நம்பிக்கை உள்ளவர்கள் நம்மில் பலர் உள்ளார்கள். அவர்களுக்கு ஆறுதல் தரும் வகையில் ஏதாவது சாஸ்திரங்கள் கேட்டுள்ளீர்களா. அதுவும் வாழ்வில் ஒரு கடமையல்லவா ?*

மனோகரன் : சாஸ்த்திரங்கள் என்பவை தனிப்பட்டவரின் நம்பிக்கைகளால் எல்லைப் படுத்தப்படுவது. ஆனால் போராட்டம் ஆரம்பித்த காலத்திலேயே தமிழகத்தின் பிரபல ஜோதிடர் ஒருவர் பிரபாகரனின் பிற்கால வாழ்வு மர்மம் நிறைந்தாக இருக்கும், யாரும் அவரைக் காண இயலாது என்றும் அவர் எங்கே என்ற கேள்வி பெரும் மர்மமாகவே இருக்கும் என்றும் தெரிவித்தார். நாம் அப்போது அதைப் பெரிதாகக் கருதவில்லை. ஆனால் இப்போது அதையும் எண்ணிப்பார்க்கிறேன். அதற்குமேல் பிரவேசிக்கவில்லை.

*கேள்வி : போரின்பின் பிரபாகரன் உடலம் போன்ற ஒன்று காண்பிக்கப்பட்டது- அதை ஏன் நீங்கள் பொறுப்பெடுக்க வில்லை.?*

மனோகரன் : அது உண்மையாகவே பிரபாகரன் உடலம் என்று எரிக் சொல்கெய்ம் கூட உறுதி செய்தாரா இல்லையே. சரி அதை [illegible] பிரபாகரன் உடலம்தான் என்றால், அதை ஏன் சில நாள்களாவது பாதுகாத்து வைத்திருக்க காண்பிக்கப்பட்டபோது மட்டும் ஏன் என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை? அதுவும் குடும்ப நன்மை தீமைகளுக்குள் வரும் தானே? மேலும் அப்போது நடேசன் பலருடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். அவர் மூலமாகவேனும்; அந்தச் செய்தியை ஏன் என்னிடம் கூறவில்லை. ஆம். அப்படியான நிகழ்வுகள் நடந்திருந்தால் குறைந்தபட்சம் நடேசன் மூலமா வது எனக்கு சொல்லியிருப்பார். மேலும் அப்போது எனது தந்தை அங்கே இருந்தார். அவராவது அந்தச் செய்தியை கண்டிப்பாக எனக்குச் சொல்லியிருப்பார். யாருமே என்னிடம் எதுவும் கூறவில்லை, எல்லோரின் கைகளிலும் தொலைபேசி இருந்தது. அது செயற்பட்டுக் கொண்டுதான் இருந்தது. பிரபாகரனின் மனைவி எம்முடன் தொடர்பில் இருந்தவர்.. அவர் கூட போன் செய்யவில்லை ஏன்.நன்றாக யோசித்துப் பாருங்கள். எல்லாவற்றையும் யோசித்தால் எங்கோ ஓர் இனம் ரியாத இருள்விளக்கமின்றி இருப்பது தெரிகிறதல்லவா?

*கேள்வி : உண்மைதான் சரி .. உங்கள் தம்பி பிரபாகரன் ஆடம்பர வாழ்வு வாழ்கிறார். நீச்சல் தொட்டியில் குளிக்கிறார் என்று படங்கள் வெளியாகின அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்..?*

மனோகரன் : உங்களிடம் முன்னரே சொல்லியிருக்கிறேன். அவர் தமிழேந்தியிடமிருந்து மாதச் சம்பளம் வரவில்லை என்பதால் மகனுக்குச் சிறிய விளையாட்டு சாமானையே வாங்கிக் கொடுக்க முடியாது யோசித்தவர். எளிமையின் வடிவமாக வாழ்ந்தவர். பொதுமக்களின் சொத்தைச் சுய தேவைக்காக பாவிக்கும் பழக்கம் தெரியாதவர். இரத்தம் சிந்திய மாவீரருக்காக தேடிய பணத்தை தொடுமளவிற்கு இதயமற்றவர்கள் உலகில் இருப்பார்கள் என்று கருதும் தகவல் அவர் மூளையில் இல்லவே இல்லை. எனவே பொதுப்பணத்தில் ஆடம்பர வாழ்வு என்ற பேச்சுக்கே அவர் வாழ்வில் இடமில்லை. ஆனால் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்தில் அவரைப் பார்க்கக் குடும்பத்தினர் இங்கிருந்து

டது. ஆனால் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் இருந்ததைவிட சிறந்த தமிழீழ அரசைப் பிரபாகரன் உருவாக்கி முடித்திருந்தார். கடற்படை, ஆகாயப்படை, பொலீஸ்பிரிவு, வங்கித்துறை, தரைப்படை, தமிழீழ நிர்வாகம் என்று சட்டம் நீதி- நிர்வாகம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய சட்டவாட்சியை வள்ளுவர் காட்டிய நெறியோடு வரையறை செய்து வழங்கி விட்டார். உலகிற்கே ஒரு முன்மாதிரியான தேசத்தை உருவாக்கி சாதனையும் படைத்துவிட்டார். அதைத்தான் நீங்கள் எல்லோரும் வன்னியில் கண்கூடாக பார்த்து விட்டீர்கள். தென்னை மரத்தில் ஏறி வட்டு வரை சென்றுவிட்ட ஒருவன் அதிலிருந்து கீழே இறங்கி என்னால் தென்னை யின் வட்டு வரை செல்ல முடியுமா என்று கேட்டு வாக்கெடுப்பு வைத்தால் எப்படியிருக்கும்? இப்படியொரு கேள்விக்கு பதில் ஒன்று தேவையா? இதற்குப் பதில் கூறத்தேவையில்லை. சில கேள்விகளுக்கு மேல் வைக்கப்படும் கேள்விகளே அதற்குரிய பதில்களாக அமையும். இதுவும் அந்தவகை சார்ந்ததே.

*கேள்வி : அப்படியானால் இப்போது நாடுகடந்த தமிழீழஅரசு என்ற இன்னொன்று வருகிறது. அதுபற்றி என்ன கூறுகிறீர்கள் ?*

**நேர்காணல்: கி.செ.துரை**

மனோகரன் : நமது நாட்டில் இப்போது உங்கள் வீட்டை நீங்களே போய்பார்க்க வேண்டுமானால் உங்கள் வீட்டுக்கான உறுதியைக் கொண்டுபோக வேண்டும். ஆளில்லாமல் கிடக்கும் உங்கள் வீட்டை நீங்களே பார்க்க உறுதிவேண்டும். மறந்து விடாதீர்கள் வாழ்வதற்கல்ல ஒரு தடவை பார்ப்பதற்கு. உறுதி இல்லாவிட்டால் உங்களைஉங்கள் வீட்டிற்கே இராணுவம் அனுமதிக்க முடியாதநிலை இருக்கிறது. பிரபாகரன் வாழ்ந்த வீட்டை சிங்கள மக்கள் பார்ப்பதால் அது இடிக்கப்படுகிறது. அதற்கும் உறுதி வேண்டுமோ என்னவோ.(சிரிப்பு).

நமக்கு உரிமை எங்கே இருக்க வேண்டும் எம் தாயகத்தில். வெளிநாடுகளில் வாழ்வோருக்கு சட்டரீதியான

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித பத்திரிசியார் தினத்தையொட்டி யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த மாலை நேரத் தேநீர் விருந்துபசாரம் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மேல் நீதிமன்ற அரச சட்டவாதி டி.எஸ்.சூசைதாஸன், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்ஸ் ஆகியோர் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், அன்றைய தினம் இடம்பெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் முதலிடம் பெற்றவர்களுக்குப் பிரதம விருந்தினர் அரச சட்டவாதி டி.எஸ்.சூசைதாஸன் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகமும் படத்தில் காணப்படுகிறார். (50)

# அனைத்து மக்களும் வாக்களித்திருந்தால் ஆறு ஆசனங்களைப் பெற்றிருப்போம்

## கௌரவிப்பு நிகழ்வில் டக்ளஸ் உரை



யாழ்ப்பாணம், ஏப்.16

மக்கள் வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து பெருமளவில் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தால் எமது கட்சி ஆறு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியிருக்கும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கூறினார்:

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைச்சருக்கு நடத்திய கௌரவிப்பு நிகழ்வு சங்கத் தலைவர் கே. தெய்வேந்திரன் தலைமையில் கேட்போர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரைநிகழ்த்துகையில்: கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலகு கடனைப் பெற்று கூட்டுறவு அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனை விட அரச கடன்களை இரத்துச் செய்வதற்கும் நான் நடவடிக்கை மேற்கொள்ளுகின்றேன்.

ஆறு ஆசனங்களை எதிர்பார்த்தேன்

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி அமோக வெற்றியீட்டும் என்று எதிர்பார்த்தேன். குறைந்தது ஆறு ஆசனங்களையாவது எம் பக்கம் வரும் என்றும் எண்ணினேன். ஆனால் அது கைகூடவில்லை. மக்கள் சரியான முறையில் வாக்குகளைப் பயன்படுத்தியிருந்தால் எமக்கு ஆறு ஆசனங்கள் கிடைத்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இதேவேளை - நிராகரிக்கப்பட்ட பெருமளவான வாக்குகளும் எமது பெருவெற்றியின் பின்னடைவுக்கு மற்றுமொரு காரணம் - என்றார்.

இந்தப் பாராட்டு விழாவில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா, சங்கத்தை சேர்ந்த செல்லத்துரை, என். இராசரட்ணம், பொதுமுகாமையாளர் ரி.மனோகரன், கணக்காளர் எம்.குமணதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (4-224)

# தையல், மனையியல் கண்காட்சி — 19 ஆம் திகதி யாழ். இந்துவில் ஆரம்பம்

நல்லூர், ஏப்,16

வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை வரை யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ந. ஜெயராஜன் தலைமையில் நடைபெறும்.

யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இரண்டு தினங்கள் நடைபெறும். இக்கண்காட்சியையும் விற்பனையையும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் அரச அதிபர் கே. கணேஷ், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் கே. கே. பெலிசியன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் ,யாழ் இந்துக் கல்லூரி அதிபர் வி. கணேசராஜா ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (50-111)

# இலந்தைக்குளம் விநாயகர் ஆலய வெளி வீதிக்கு தார் இடப்படவுள்ளது

யாழ்ப்பாணம். ஏப் ,16

கொழும்புத்துறை மேற்கு, இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்தின் வெளிச்சுற்றாடல் வீதி தார் வீதியாகப் புனரமைக்கப் படவுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் புராதன ஆலயத்தின் வெளி வீதியை தார் போட்டு புனரமைப்பதற்கென மாநகராட்சி மன்றம் நிதியை ஒதுக்கியுள்ளது.

வீதியின் புனரமைப்புப் பணிகளை இம்மாதம் இறுதிக்குள் செய்து முடிப்பதற்கென ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (04-224)

# சிவபூமி முதியோர் இல்லத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஏப்,16

சிவபூமி முதியோர் இல்ல மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாலச்சந்திரன் அரங்கில் நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கையின் சர்வதேச அபிவிருத்திக்கும் புனர் நிர்மாணத்துக்குமான நிறுவனத்தின் சுகாதார இணைப்பாளர் மூதறிஞர், வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் தம்பதிகளும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.குமாரவடிவேலும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் மாலை சிறப்பு நிகழ்ச்சிகளாக கவிஞரும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையிலான கவியரங்கமும், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையிலான பட்டிமன்றம், சுன்னாகம் ஸ்கந்தா மாணவர்களின் 'ஆர் அறிவார்' நாடகமும் மற்றும் விசேட கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (50-16-224)




# புத்தாண்டை யாழ்ப்பாணத்தில் இம்முறை கொண்டாடிய தென்னிலங்கைப் பயணிகள்

யாழ்ப்பாணம் ஏப் ,16

சித்திரைப் புத்தாண்டை பெருமளவான சுற்றுலாப் பயணிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்தப் புத்தாண்டை கொண்டாடுவதற்கென கடந்த செவ்வாய்க்கிழமை, புதன் கிழமைகளில் பெரும் எண்ணிக்கையான பயணிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

புத்தாண்டு தினத்தன்று சுற்றுலாப் பயணிகள் நல்லூர் கந்தசுவாமி, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், யாழ் நாகவிகாரை போன்றவற்றுக்குச் சென்று விஷேடவழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

அதே சமயம் வழமையை விட புத்தாண்டு தினத்தன்று யாழ்.நகரில் சன நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது.

போக்குவரத்து சேவைகளும் வழமையைப் போன்று நடைபெற்றன.

ஆனால் வர்த்தக நிலையங்கள் கூடுதலாக மூடப்பட்டு காணப்பட்டன.

இவ்வாறு வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் தமக்குரிய பொருள்களை பெற்றுக்கொள்ள முடியாது சிரமப்பட்டனர். (04-224)

# சமூக சேவையாளர் சிவபாலனின் அஞ்சலிக் கூட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஏப். 16

பிரபல சமூகசேவையாளர் நீர்வேலியூர் அமரர் கா.சிவபாலனின் அஞ்சலிக்கூட்டமும், நினைவுப் பேருரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவி திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நிகழவுள்ள இந்த அஞ்சலிக்கூட்டத்தில் நீர்வை கந்தசுவாமி ஆலயப் பிரதமகுரு இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள், நீர்வை மணி கு.தியாகராஜக் குருக்கள், அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பிரதம குரு சா. சோமதேவக் குருக்கள் ஆகியோர் உட்பட பலர் அஞ்சலியுரையை நிகழ்த்துவார்கள். (04-224)

# 600 பேருக்கு 'கேபிள்' இணைப்புகளை புதிதாக வழங்க 'ரெலிக்கொம்' நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.16

சிறிலங்கா 'ரெலிக்கொம்' நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் தமது சேவையை மேலும் விஸ்தரித்து வருகிறது.

அதன் ஓர் அங்கமாக சாவகச்சேரி, சித்தங்கேணி, மானிப்பாய் ஆகிய பகுதியில் பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிவர்த்தனை நிலையங்களை அண்மித்த பகுதியில் 600 பாவனையாளர்களுக்கு 'கேபிள்' தொலைத் தொடர்பு இணைப்புக்கள் முதற்கட்டமாக வழங்கப் படவிருக்கின்றன.

சாவகச்சேரிப் பரிவர்த்தனை நிலையத்தை அண்மித்த பகுதியில் 300 இணைப்புக்களும், சித்தங்கேணிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பரிவர்த்தனை நிலையத்தை அண்மித்த பகுதியில் 200 இணைப்புக்களும், மானிப்பாய் பரிவர்த் தனை நிலையத்தை அண்மித்த பகுதியில் 100 இணைப்புக்களும் வழங்கப்படவிருக்கின்றன என 'சிறிலங்கா ரெலிக்கொம்' நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அலுவலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக இந்த 600 இணைப்புகளும் வழங்குவது நிறைவடைந்த பின்னர் மேலும் அதிக இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன எனவும் அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். (04-14)

# விழிப்புலனற்றோருக்கிடையிலான சிறுகதைப் போட்டியில் முதலிடம்



சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிதியம் நாடளாவிய ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் கைதடியைச் சேர்ந்த சு.சிவராஜா முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும், வயது வந்தோருக்கு மற்றொரு பிரிவாகவும் சிறுகதை, கவிதை ஆகியவற்றை ஆக்கும் போட்டிகள் அகில இலங்கை ரீதியில் உள்ள விழப்புலனற்றோருக்கிடையே நடத்தப்பட்டன.

இதில் வயது வந்தோருக்கான பிரிவில் தமிழ்மொழிரீதியில் கைதடியைச் சேர்ந்த சு.சிவராஜா முதலிடத்தைப் பெற்றிருக்கிறார்.

இவர் சிறுகதைத் துறையில் இதற்கு முன்னரும் பல பரிசில்களைப் பெற்றுள்ளதோடு, பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் இவரின் பலபடைப்புகள் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Global வழங்கும் கொம்ப்யூட்டர் பாடநெறிக்கான விசேட சிறப்புச் சலுகை.
* சகல பிரிவினருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
- Diploma In Ms Office 2007
- Diploma In Desktop Publishing
- Diploma In Computer Applications
- Diploma In Web Page Design
- Junior Diploma In Computer Science
- Certificate in Photoshop CS3

விசேட சிறப்புச் சலுகை 50% கட்டணக் கழிவு
100% Practical

மல்டிமீடியா துறைக்கான புதிய பிரிவுகளும் குதுகலமாக ஆரம்பம்.
Pre Press Designing , Video & Audio Mixing
student visa,மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு உகந்த Canadian Certificate ஒன்றினை நீங்களும் பெற்றுக் கொள்வதற்கு உங்கள் Global உடன் இணைந்து கொள்ளுங்கள்...
Global Academy of Automations
[The Best It Education] Tel : 0113050111
#5 First Floor, New Market Building, Jaffna.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில் 30 ✱ 04 ✱ 1934



இறைவன் அடியில் 17 ✱ 04 ✱ 2009

## திருமதி பிலோமினா துரைசிங்கம்

உலகில் நீயும் வாழ்ந்தகாலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே
சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும்
தொடர்ந்து வாழும் என்றுமே,

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான திருப்பலி இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்திலும் நாளை (17.04.2010) சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.அருள் ஆச்சிரமத்திலும் முற்பகல் 11 மணிக்கு மன்னார் மருதமடு திருப்பதியிலும் நடைபெறும்.

368/3 B, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (96991) குடும்ப உறவுகள்.

# மரண அறிவித்தல்

## முத்துத்தம்பி இராசலட்சுமி



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி இராசலட்சுமி 14.04.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் சாந்தநாயகி (ஜேர்மனி), சாந்தமலர், சாந்தகுமாரி (லண்டன்), சாந்தகோகிலம் (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சந்திரன் (இத்தாலி), சாந்தரூபி (ஆசிரியை, மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் சமன் (லண்டன்), பஞ்சலிங்க நாதன் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), கல்யாணி (இத்தாலி), ஸ்ரீரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதங்கி, சகிபா, மதுஷா, அபிராம், நர்த்தனி, மயூரி, சந்தியா, சகிரான், தர்சிகா,சாருகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

190 ஆம் கட்டைப்படி, ([illegible]) தகவல்:
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

# செயலமர்வு

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும்,விரிவுரையாளர்களும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு கல்வியியற் கல்லூரிக்கு சமுகம் தருமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

மே மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தயார் செய்வதற்காகவும், அக்காலப் பகுதியில் பாடசாலைக்கு மாற்றுப் பயிற்சி ஆசிரியர்களை ஒழுங்கமைப்பதற்காகவும் இச்சந்திப்பு இடம்பெறுகின்றது. உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் தமது பாடத்திட்டம், பாடக்குறிப்பு புத்தகங்களை கட்டாயம் எடுத்து வருமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (16)

# மென்பந்துக் கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஏப்.16

உதயன் நிறுவனத்தின் ஊடக அனுசரணையுடன் மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் நடத்தும் பி.தர்மேசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி முன்பாகவுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது. (50-23)

# பல்லசுட்டியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

சுழிபுரம், ஏப் 16

பல்லசுட்டி கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் பெரும் பிரச்சினையாக உள்ளது. தினமும் அங்கு வாழும் மக்கள் நல்ல குடிதண்ணீர் எடுப்பதற்காக பலமைல் தூரம் சென்று தங்கள் தேவையை நிறைவு செய்து வருகின்றனர்.

இக்குறையைத் தீர்த்து உதவுமாறு அங்கு வாழும் மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டுள்ளனர். தண்ணீர் கிடைக்க ஆவண செய்யவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். முதலில் பல்லசுட்டியிலுள்ள பொது இடத்தில் தண்ணீர்த் தொட்டியைக் கட்டி வாகனம் மூலம் நல்ல தண்ணீரை எடுத்து வந்து நிரப்பி மக்கள் அவசிய தேவையை நிறைவு செய்ய ஏற்ற ஏற்பாடுகள் செய்து தருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நல்ல தண்ணீர் கிடைக்கும் கிணறுகளை இணங்கண்டு ஒரு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (50-28)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வலய, மாவட்ட மட்ட தமிழ்மொழித் தினப் போட்டி-2010 தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.புலோலி மெ.மி. த.க பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

எனவே வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கின்ற அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ம.செல்வராசா அறிவித்துள்ளார். (-16)

## பணியாள் தேவை

மாணவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கக்கூடிய, உணவு சமைத்து வீட்டைப் பராமரிக்கக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு: 077 9578244 (96999)

## தேவை

ரொபின் 20 நீர் இறைக்கும் இயந்திரமும், 10HP மின் சாரத்தில் இயங்கும் மோட்டரும் (3 Phase RPM 1450), 1 HP (3Phase, RPM 1450) மோட்டரும் உடன் தேவை.
தொடர்பு: 071 2962798. (96998)

## தவறிவிட்டன

32, சீனியர்லேன், கலட்டி என்னும் முகவரியுடைய கறுப்பையா ஜெகன் என்பவரது மோட்டார் சைக்கிளின் (500 - 1671) காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம், தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கலட்டி அம்மன் கோயிலுக்கும் கொக்குவில் சந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பி.வ. T.P உடன் தொடர்பு கொள்ளவும்.
077 8658602 (96987)

## தவறிவிட்டது

13.04.2010 செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ்.பஸ் நிலைய தரிப்புக்கு அருகில் ஒரு பவுண் நிறையுடன் தங்கக் காப்பு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [illegible]
T.P. 0775428917

# தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)

பதிவு இல: ஜே/1013

## முக்கிய அறிவித்தல்

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் ஆவணங்கள், சொத்துக்கள் யாவும் அழிந்த நிலையில் பல வருடங்களாக அவ் வைத்தியசாலைச் சங்கம் இயங்கவில்லை. தற்போது இச்சங்கத்தை மீளவும் புனரமைப்பதற்கும் பொதுச் சபையினை விரைவில் கூட்டி புதிய நெறியாளர் குழுவினைத் தெரிவு செய்வதற்கும் எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில் ஏற்கனவே இச் சங்கத்தின் அங்கத்தவராக இருந்தவர்களும் புதிதாக சேர விரும்புகின்றவர்களும் (வலி - வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலக பிரிவுக்குள் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் அங்கத்துவப் படிவத்தைப் பூரணப்படுத்தி 30.04.2010இற்கு முன்னர் பங்கு ரூபா 100/=உம் பிரவேசம் ரூபா 25உம் சேர்த்து மொத்தமாக ரூபா நூற்றி இருபத்தைந்தினை பொருளாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்று தமது அங்கத்துவத்தை உறுதி செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| நா.தவநாதன் | சு.ஏழூர்நாயகம் | க.இராதாகிருஷ்ணன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

துர்க்காபுரம்,தெல்லிப்பழை. (96988)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி அ.தவராஜசிங்கம் அவர்களின் பாசமிகு தாய்

## கைலாயபிள்ளை கனகம்மா

அவர்களின் மறைவால் (15.04.2010 வியாழக்கிழமை) துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(96992) யா/மல்லாகம் ம.வி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஷ்பராணி தயானந்தன்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பராணி தயானந்தன் (14.04.2010) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் தயானந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி (ஆசிரியர்) - அரியரத்தினம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும் கணேந்திரன் (யாழ்.பேபி நீட்ஸ் அன்ட் பார்மசி), பகீரதி (லண்டன்), தமிழ்ச்செல்வன் (இத்தாலி), மீராபாரதி (சுவிஸ்), ஹரிகரன் (மாணவன், உயர் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு தாயும் துஷ்யந்தி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம் சங்கானை), தேவமனோகரன் (லண்டன்), ரேஷ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ரஹானன், அபிராமி, அக்ஷயன் (லண்டன்), சுவாகன், சாயினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அரியநாயகம் (வவுனியா), யோகராணி (கண்டா), தருமராசா, சிவராசா (ஜேர்மனி), இந்திராணி, காலஞ்சென்ற மகேந்திரராணி மற்றும் தேவராசா (அதிபர், சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), கமலராசா (இத்தாலி), காலஞ்சென்ற தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவேந்திரநாதன் (சிலாபம்), விஜயானந்தன் (பிரான்ஸ்), நித்தியானந்தன் (வவுனியா), சிவானந்தன், சச்சிதானந்தன் (இத்தாலி), வசந்தாதேவி, இராஜேஸ்வரி, பொன்னம்பலம், மனோன்மணி, அம்பிகைபாகன், காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் ஜெகதீஸ்வரி (ஆசிரியர் கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை), விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

முத்தட்டுமட ஒழுங்கை, தகவல்:
கோண்டாவில் மேற்கு,கோண்டாவில். குடும்பத்தினர். (96975)

## சின்னத்துரை சுந்தரலிங்கம் [சுந்தரம்]



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம் நேற்று (15.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - செந்தாமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவமலர் மற்றும் சயாநிதி ஆகியோரின் அன்புக் கணவரும் துரைசிங்கம், காலஞ்சென்ற அன்னலக்சுமி மற்றும் ஜெகசோதிமலர், சண்முகலிங்கம், இரத்தினசிங்கம் (ஜேர்மனி), சிவராசா (லண்டன்), அன்னலிங்கம் (லண்டன்), ஜெயலக்சுமி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் செல்லத்துரை, மகேந்திரராசா, கமலாதேவி, வரலக்சுமி, கேதீஸ்வரி, பிறிந்தா, சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சொருப நிதி, தபோநிதி, ஹரிமுகன், ஸ்ரீக்குமார், துருபன், சிவபாலன் ஆகி யோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியளவில் வராகி கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு, தகவல்:
கொக்குவில். (96985) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கென யாழ்.செயலக வளவில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் (தொழில்நுட்பம்) ஏ.டபிள்யூ.திஸநாயக, திணைக்களத்தின் யாழ். உதவி ஆணையாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர், அடிக்கல் நடுவதை முதல் மூன்று படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். *(படங்கள்:லக்ஸ்மன்)*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 04 • 04 • 1965



விண் நெகிழ 27 • 04 • 2009

### அமரர் நடராசா யோகராசா (ராசன், ஆசாரி)

அன்பின் உறைவிடமே
பண்பின் இருப்பிடமே
உங்கள் நினைவுகளால்
ஊமையாய் அழுகின்றோம்
ஆணிவேராய் எமைக் காத்து நின்ற அப்பாவே
விழுதுகள் நாம் விம்முகின்றோம்-விழிகளில்
ஆண்டு ஒன்றாகியும் ஆறவில்லை-எம்மனம்
காலங்கள் கடந்தாலும் மாறாது
உங்கள் நினைவலைகள்.

அம்பாள்குளம்,
கிளிநொச்சி.

மனைவி - புஸ்பராணி,
பிள்ளைகள்-கனிஷிகா,
புவிலதன், கஜப்பிரியன்.

[96942]

## பெருந்திரு விழா

யாழ்ப்பாணம், ஏப். 16

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளன.

நாளை முற்பகல் 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை சப்பரத்திருவிழாவும், 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (16)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தாயின் மடியில் 04 ★ 10 ★ 1947



இறைவன் அடியில் 15 ★ 03 ★ 2010

### அமரர் பொன்னையா இராமச்சந்திரன்

(முன்னைநாள் முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், வலி.கிழக்கு)

"அன்பு சொரிந்தெம்மை பண்புடனே பார்த்திருந்தீர்-உங்கள்
பாசவிழிப் பார்வையாலே-எமை காத்திருந்தீர் - இன்றும்மை
காலனவன் கவர்ந்து சென்றதேனோ? கலங்கி அழுகின்றோம்
காணலையே எங்களப்பா....! வருவீர் என நாம் வாடுகின்றோம்
ஐயனே! வந்தெம்மைப் பாருமையா....!

15.03.2010 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னையா இராமச்சந்திரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நிகழ்வு 12.04.2010 திங்கட்கிழமை அன்று யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றதுடன் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.
தொ.பே: 0777075131

(969443)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 4 Km தூரத்திலும் நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்
T.P: 0772469015, 0725682849,
0786711952.

[96907]

## அருள்முருகன் திருமண சேவை

Doctors, Engineers மற்றும் விரும்பும் மணமக்கள் தேவைக்கு இன்றைய தெரிவாக திகழ்கின்ற சேவை! அரச உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வுகால கௌரவ சேவை!! (தரகரல்ல) திருமணசேவையில் புதியதோர் அத்தியாயத்தை தொடங்கும் தீவிர செயற்பாடுகள்!!! இந்து, கிறிஸ்தவ சகல சமூக மணமக்களும் பெற்றோரும் இந்த சேவையில் ஒன்றிணையலாம். 03, யாழ்.வீதி, சிராம்பியடி லேன், ஆரியகுளச் சந்தி சமீபமாக ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 9334

## வீடு, காணி விற்பனைக்கு

வல்லை வீதி, சங்கானை எனும் முகவரியில், தொழில் ஸ்தாபனம் அமைக்கக்கூடியதான, குடியிருக்கக்கூடியதான 2½ பரப்பு விஸ்தீரணமுள்ள றோட்டுக் கரைக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் வரவும். சங்கானை, மல்லாகம் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் அமைந்துள்ளது. தொடர்பு: திருமதி T.இரவிச்சந்திரன் T.P. 021 320 6248

## தவறிவிட்டது

வவுனாவத்தை, தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் வசந்துரா என்பவரது தே.அ.அ. (866871714 4v) 04.04.2010 தெல்லிப்பழைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0775143952 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## மணமகள் தேவை

பருத்தித்துறையைச் சேர்ந்த இந்து பெற்றோர், U.S.Aயில் (P.R உள்ள) கொம்பியூட்டர் எஞ்சினியராகப் பணிபுரியும் 32 வயது மகனுக்கு டாக்டர்/ எஞ்சினியர்/கொம்பியூட்டர் படித்த அழகிய மணமகளைத் தேடுகிறார்கள்

தொடர்பு-0770203631

## ஓராண்டு நினைவு தினம்



### திருமதி கந்தையா நாகம்மா

மண்ணுலகில் 09★04★1934 விண்ணுலகில் 27★04★2009

திதி: வளர்பிறை துதியை (16.04.2010)

அன்பு மழை பொழிந்து அவனியிலே எம்மையெல்லாம்
பாசத்தின் சுமையோடு அரவணைத்துக் காத்த
எம் அன்புத் தாயவளே!
நீங்கள் நீடு துயில் கொண்டு ஓராண்டு காலமாச்சே.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(96984)

என்றும் உங்கள் நினைவோடு தவித்து நிற்கும்
குடும்பத்தினர்.

## 12ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

வையத்துள் 02 ✸ 04 ✸ 1912



வானுலகுள் 28 ✸ 04 ✸ 1998

### திருமதி இராஜசேகரம் அரசரத்தின அம்மாள்

திதி: துதியை (16.04.2010)

எம் குடும்பக் குல விளக்கே
நாம் வாழ சூரியனாய் நின்று
ஒளி தந்தாய் தாமரை போல் நம்
வழ்வு மலர்ந்தது எமக்கு
தென்றலாய் நீ இருக்க புயலாய்
வந்தான் காலன் எம்மிடமிருந்து
உன்னைப் பற்றித்தான் பன்னிரண்டு ஆண்டுகள்
அல்ல ஓராயிரம் ஆனாலும் உன் பாச
நினைவுகள் எம் இதயத்தை விட்டு அகலாது.

இல.09, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(96978)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் பூகம்பம்; 617 பேர் மரணம்!

## 313 பேரைக் காணவில்லை; 10 ஆயிரம் பேர் காயம்




பீஜிங், ஏப். 16

சீனாவில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாகின. இடிபாடுகளில் புதைந்து 617 பேர் பலியாகினர். மேலும், 313 காணாமற்போயுள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இடிபாடுகளில் பெரும் எண்ணிக்கையானோர் சிக்கி இருக்கின்றனர். இதனால், பலி எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டும் என்று அஞ்சப்படுகிறது.

சீனா, குயின்கய், யஷு பகுதியில் நேற்று முன்தினம் காலை பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இந்தப் பூகம்பம் 7.1 ரிச்டர் அளவு கோலில் பதிவானது. இதனால், அந்தப் பகுதியில் இருந்த ஏராளமான மண் வீடுகள் தடைமட்டமாகின. பள்ளிகள், விடுதிகள் இடிந்தன. கொன்கிரீட் கட்டடங்கள் மட்டுமே பூகம்பத்தை தாங்கின. இருப்பினும், அவற்றிலும் அபாயகரமான நிலையில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.

பூகம்பத்தால் ஜிய்கு நகரம் 85 வீதம் அழிந்துவிட்டது. வீடுகள் மண் குவியலாகிவிட்டன. பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் தொலைத்தொடர்பு மின்சார வசதி, போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உள்ளன. விமான ஓடுதளங்களும் சேதமடைந்து விட்டதால் விமானப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு உள்ளது. பூகம்ப இடிபாடுகளில் புதைந்து 617 பேர் இறந்துள்ளனர்.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இடிபாடுகளில் பெரும் எண்ணிக்கையானோர் சிக்கி இருப்பதால் பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது.

வீடுகளை இழந்த மக்கள், மைதானங்களில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. காயம் அடைந்தவர்களுக்கு தற்காலிக மருத்துவ முகாம்களில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பூகம்பத்தால் அணைகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவற்றில் உள்ள தண்ணீரை வெளியேற்றும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். மலைப் பகுதி என்பதால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுவருகிறது. பள்ளி விடுதி கட்டட இடிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

ஜிய்கு நகரத்தில் ஒரு லட்சம் மக்கள் வசித்து வந்தனர். வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர். இந்தியர்களும் இங்கு வசிக்கின்றனர். அவர்களின் நிலை தெரியவில்லை. மீட்புப் பணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். குயின்கய் மாகாணத்தின் தலைநகரான ஜினங்கில் இருந்து 800 கிலோ மீற்றர் தொலைவில் திபெத் சுயாட்சி பகுதியையும் குயின்கய் மாகாணத்தையும் பிரிக்கும் திபெத் மலைப் பகுதியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த பூகம்பத்தின் மையம் கொண்டிருந்தது. பூகம்பத்தை தொடர்ந்து சிறிய நில அதிர்வுகள் நீடிக்கின்றன. இதனால் மக்களின் பீதி நீங்கவில்லை.

இப்போது பூகம்பம் தாக்கியுள்ள குயின்கய் மாகாணத்துக்கு அருகே உள்ள சிசுவான் மாகாணத்தில்தான் 2 ஆண்டுகளுக்கு முன்பு பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. அதில் 90 ஆயிரம் பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். இராணுவ விமானத் தாக்குதல்; 71 பழங்குடி இன மக்கள் மரணம்

பாகிஸ்தான் பழங்குடி இனப்பகுதியில் பதுங்கி இருக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 71 பழங்குடி இன மக்கள் பலியானார்கள்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் பழங்குடி இன மக்கள் பெரும் எண்ணிக்கையானோர் வசிக்கிறார்கள். இந்தப் பகுதியில் பதுங்கி இருக்கும் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காகப் பாகிஸ்தான் இராணுவம் விமானத் தாக்குதலை ஆரம்பித்து உள்ளது.

ஆரக்சாய், கைபர் ஆகிய பகுதிகளில் தொடர்ந்து விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த சனிக்கிழமை கைபர் பகுதியில் நடந்த விமானத் தாக்குதலில் ஏறக்குறைய 71 பழங்குடி இன மக்கள் பலியாயினர் எனக் கூறப்படுகிறது. பழங்குடி இன மக்கள் பலியானதை அரச அதிகாரி ஒருவரே ஒப்புக்கொண்டார். பலியான பழங்குடி இன மக்களுக்கு இழப்பீடாக ரூபா 62 லட்சம் வழங்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கையால் 10 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயம் அடைந்த பழங்குடி இன மக்கள் அருகில் உள்ள பெஷாவர் நகர வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்குப் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## உலக அரங்கில்

### ஜூன் மாதம் போலந்தில் ஜனாதிபதித் தேர்தல்

போலந்து நாட்டு ஜனாதிபதி லெக் கக்சியான்ஸ்கி, விமான விபத்தில் ரஷ்யாவில் பலியானமையைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்து எடுப்பதற்கான தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடக்கிறது.

எதிர்வரும் ஜூன் மாதம் 13 அல்லது 20 ஆம் திகதி இந்தத் தேர்தல் நடக்கும் என்று தெரிகிறது. இந்த இரு திகதிகளில் எந்தத் திகதி என்பதை இடைக்கால ஜனாதிபதி கொமோரோவ்ஸ்கி முடிவு செய்வார். இதற்காக அவர் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

## ஐ.பி.எல். அணி ஏலம் தொடர்பான விவகாரம்

# சசிதரூரை பதவி நீக்குக! - எதிர்க்கட்சிகள்
# ஆதாரம் இருந்தால் நடவடிக்கை - பிரதமர்

சென்னை, ஏப். 16

ஐ.பி.எல். அணியில் கொச்சி அணியை ஏலத்தில் எடுத்த விவகாரம் தொடர்பான முறைப்பாட்டில் ஆதாரம் இருந்தால் மத்திய அமைச்சர் சசிதரூர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

இதேவேளை, மத்திய அமைச்சர் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று பா.ஜ.க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஐ.பி.எல். அணியில் கொச்சி அணியை ஏலத்தில் எடுத்த விவகாரத்தில் தற்போது சசி தரூர் சிக்கியுள்ளார். கொச்சி அணியின் பங்குதாரர்களில் சசி தரூரின் பெண் நண்பர் சுனந்தா புஷ்கரும் உள்ளார். இவருக்கு ஒதுக்கப்பட்ட 25 சதவீத பங்கில் 19 சதவீதம் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூபா 70 கோடியாகும்.

ஐ.பி.எல். போட்டிக்கான ஆணையர் லலித் மோடி, கொச்சி அணியின் பங்குதாரர்கள் பட்டியலை வெளியிட்டபோது இந்த விடயம் வெளிவந்தது. இது தொடர்பாக சசி தரூருக்கும், மோடிக்கும் இடையே கடுமையான கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதால் அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று பா.ஜ.க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

சசி தரூரை பதவியில் இருந்து தூக்கி எறிய வேண்டும் என்று நேற்றுமுன்தினம் மீண்டும் பா.ஜ.க. போர்க்கொடி தூக்கியது. அதன் செய்தி தொடர்பாளர் ரவி சங்கர் பிரசாத் இதுகுறித்து பேட்டி அளிக்கையில்-

சசி தரூர் தொடர்பான அனைத்து விடயங்களும் தற்போது பொது மேடைக்கு வந்து விட்டன. தனது அமைச்சர் பதவி, அதிகாரத்தை அவர் தவறாகப் பயன்படுத்தி, ஒரு பைசா முதலீடு இல்லாமல் தனது காதலி சுனந்தா புஷ்கரை ரூபா 70 கோடி முதல் ரூபா 75 கோடிக்கு அதிபதியாக ஆக்கியிருக்கிறார் என்பது உறுதியாகி விட்டது.

பிரதமர் மன்மோகன் சிங் உண்மையிலேயே லஞ்சம், ஊழலுக்கு எதிராக போராடுபவராக இருந்தால், இனிமேலும் எந்த ஆதாரத்துக்கும் காத்து இருக்காமல், சசி தரூர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா கூறுகையில், இந்த விவகாரத்தில் முறையான விசாரணை அவசியம். அமைச்சர் பதவியில் சசி தரூர் நீடிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் - என்றார்.

இந்நிலையில் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமரிடம் இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, தரூருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து செவிவழிச் செய்திகளை அறிவேன். அதற்குரிய ஆதாரம் இருந்தால் அவர் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் பதிலளித்தார்.

வரும் சனிக்கிழமை இந்தியா திரும்பியதும் இந்த விவகாரம் தொடர்பாக அனைத்து ஆதாரங்களையும் பரிசீலித்து அதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் கூறினார்.

## இந்தியச் செய்திகள்

# மேற்கு வங்கம், பீஹார், அஸாமில் கடும் சூறாவளி; 76 பேர் உயிரிழப்பு

## 200 பேர் படுகாயம்

ராய்கஞ்ச்/கிஷன்கஞ்ச், ஏப். 16

மேற்கு வங்கம், பீஹார் மற்றும் அஸாமில் வீசிய கடும் சூறாவளி, மழைக்கு 76 பேர் பலியாகினர். 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மேற்கு வங்கத்தின் வடக்கு தினாஜ்பூர் மாவட்டம், பீஹார் மற்றும் அஸாமின் சில மாவட்டங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பெரும் சூறாவளியுடன் கூடிய மழை பெய்தது. மணிக்கு 125 கி.மீ. வேகத்தில் வீசிய சூறாவளியால் மரங்கள் அடியோடு சாய்ந்தன. ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

வடக்கு தினாஜ்பூர் மாவட்டத்தில் மட்டும் சூறாவளிக்கு 39 பேர் பலியாகினர். சூறாவளியுடன் கடும் மழையும் பெய்ததால் மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீடுகள், மரங்கள் மற்றும் விளைபொருள்கள் சேதமடைந்தன. இப்பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் விளைவிக்கப்பட்டிருந்த மூங்கில் கன்றுகள் அனைத்தும் அடியோடு அழிந்தன.

சூறாவளி மற்றும் மழையால் 50 ஆயிரத்தும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. ஏராளமான மக்கள் தங்குவதற்கு இடமின்றி தவித்து வருகின்றனர்.

நள்ளிரவில் சுமார் 40 நிமிடம் வீசிய பெரும் சூறாவளியால் மக்கள் செய்வதறியாது தவித்தனர். என்ன நடக்கிறது என்று தெரிவதற்குள்ளாகவே எங்கள் வீடுகளின் கூரைகள் அடித்துச் செல்லப்பட்டன. சூறாவளியைத் தொடர்ந்து மழையும் பெய்ததால் எங்களால் எதுவும் செய்யமுடியவில்லை - என்று ஒருவர் கூறினார்.

சூறாவளிக் காற்று காரணமாக தொலைத்தொடர்பு வசதிகள் தடைப்பட்டுள்ளன. மின்சாரக் கம்பங்கள் மற்றும் வயர்களில் மரங்கள் விழுந்ததால் பல்வேறு இடங்களில் மின்சாரம் இன்றி மக்கள் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு, குடிநீர், உடைகள் தானியங்கள் மற்றும் மருத்துவ உதவிகள் போன்றவை போர்க்கால அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்குவதற்கென தாற்காலிகக் கூடாரங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன என மாநில தலைமைச் செயலாளர் மோகன் சக்கரவர்த்தி தெரிவித்தார்.

மேற்கு வங்கம் மட்டுமின்றி பீஹார் மற்றும் அஸாம் மாநிலங்களும் சூறாவளியால் பலத்த சேதத்தைச் சந்தித்துள்ளன.

பிஹாரில் கிஷன்கஞ்ச், அராரியா, சுபால், பூர்ணியா மாவட்டங்களில் சூறாவளி மற்றும் கன மழைக்கு 33 பேர் உயிரிழந்தனர். 125 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தோர் குடும்பத்தினர் அனைவருக்கும் தலா ரூபா ஒன்றரை லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என பீஹார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

மேலும் வீடுகளை இழந்தோர்க்கு புதிய வீடுகள் கட்டித்தரவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அசாமில் துப்ரி மாவட்டத்தில் சூறாவளிக்கு நான்கு பேர் உயிரிழந்தனர். மேலும், இந்த மாநிலத்திலுள்ள ஜார்ஹத், தின்சுஹியா, சிவசாகர் மற்றும் காமரூப மாவட்டங்களும் இந்த சூறாவளியால் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.கோட்டை முன்றிலில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சிறுவர்களுக்கான குளிர்பானம் அருந்தும் போட்டியில் பங்கு பற்றிய சிறுவர்களையும் முதலாவது படத்திலும், பாடசாலை மாணவர்களுக்காக இடம்பெற்ற சித்திரப் போட்டியில் மாணவர்கள் மிக ஆர்வத்தோடு பங்குபற்றுவதை இரண்டாவது படத்திலும் , கிடுகு பின்னல் போட்டியில் பெண்கள் ஈடுபட்டு இருப்பதினை மூன்றாவது படத்திலும், மாவுக்குள் மறைத்து இருக்கும் நாணயத்தை எடுக்கும் போட்டியில் பங்குபற்றும் வீரர்களை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

# உடுவில் பிரதேசப் பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

வலி. வடக்கு, ஏப்.16

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டியீல் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

100 மீற்றர்- சா.சுவர்ணா (மருதனார் மடம் இராமநாதன் வி.க.), சு.வனஜா (உடுவில் மத்தி வி.க.),து.நிஷாந்தி(தாவடி காளியம்பாள் வி.க.).

200 மீற்றர்-சு.வனஜா (உடுவில் மத்தி. வி.க.),க.விவேகாயினி(உடுவில் மத்தி. வி.க.),வ.நிசாந்தினி(தாவடி காளியம்பாள் வி.க.).

400மீற்றர்- அ.மேர்சி (உடுவில் மத்தி வி.க.),சி.லனுஜா (உடுவில் மத்தி வி.க.), கு.குணரூபி (இணுவில் அண்ணா வி.க.).

800மீற்றர்-சி.லனுஜா (உடுவில் மத்தி வி.க.), செ.விசிதினி (ஞானமுருகன் வி.க.), ச.சயிந்தினி(இணுவில் அண்ணா வி.க.).

1500 மீற்றர்-அ.மேர்சி(உடுவில் மத்தி வி.க.), ப.மனோயா (இணுவில் அண்ணா வி.க.),ப.ஜீவிகா (இணுவில் அண்ணா வி.க.).

5000 மீற்றர்-ப.ஜீவிதா(இணுவில் அண்ணா வி.க.), அ.மனோஜா (இணுவில் அண்ணா வி.க.), இ.கீர்த்திகா (ஞானமுருகன் வி.க.).

10,000 மீற்றர்-இ.விஜிதா(இணுவில் இந்து வி.க.).

குண்டுபோடுதல்-எம்.சுபாசினி, பி.டெசானா, எஸ்.விவேகாயினி(உடுவில் மத்தி வி.க.).

நீளம் பாய்தல்-சி.கிருத்திகா(உடுவில் மத்தி வி.க.), அ.மேசி (உடுவில் மத்தி வி.க.), கி.கீர்த்திகா (மருதனார் மடம் இராமநாதன் வி.க.).

ஈட்டியெறிதல்-தா.தேனுஜா (உடுவில் மத்தி வி.க.) ,சி.மிதுளா(உடுவில் மத்தி வி.க.),ந.நிவேதா (தாவடி காளியம்பாள் வி.க.).

தட்டெறிதல்-க.சுபாஜினி, ம.ரிஷானா, யூ. கஜானா (உடுவில் மத்தி வி.க.).

உயரம் பாய்தல்-மி.பிலோனி கமலினி (உடுவில் மத்தி வி.க.), எஸ்.விசிந்தினி (ஞானமுருகன் வி.க.), வி.பவித்திரா (ஞானமுருகன் வி.க.).

தத்திமிதித்துப் பாய்தல்- சி.கிருத்திகா, மி.பிலோமினி கமலினி,என்.நிறோசனா (உடுவில் மத்தி வி.க.). (50-86)

## முதல் 10 வீராங்கனைகள்

வலி.வடக்கு,ஏப்.16

நெஸ்ரோமோல்ட், ஐ.ரி.என். மஞ்சி பிஸ்கட் நிறுவனங்களின் ஆதரவுடன் யாழ். மாவட்டப் படையினரும், யாழ். செயலகமும் இணைந்து புத்தாண்டையொட்டி நடத்திய விளையாட்டுப் போட்டித் தொடரில் இடம்பெற்ற பெண்களுக்கான வீதி ஓட்டப்போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீராங்கனைகளின் விவரம் வருமாறு:

ஆர்.காவேரி (தெல்லிப்பளை), என். மேசி (சண்டிலிப்பாய்), என்.சுமதி (சண்டிலிப்பாய்),கே.கணேஜா (சண்டிலிப்பாய்), எஸ்.நவரஞ்சினி (கரவெட்டி), ரி.ரேவதி (தெல்லிப்பளை), டி.டினோஜா (சண்டிலிப்பாய்), எஸ்.அனுசியா (சண்டிலிப்பாய்), எஸ்.சர்மிகா (கோப்பாய்), பி.தர்மினி (தெல்லிப்பளை).

(50-86)

# ஸ்கந்தா அணி வெற்றி; சதீஸ் சதம் கடந்தார்

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஸ்கந்தா - மகாஜனாக் கல்லூரி மாணவர்களிடையே நிறைவுபெற்ற 'வீரர்களின் போர்' கிரிக்கெட் போட்டியைத் தொடர்ந்து இரு கல்லூரிப் பழைய மாணவர்களிடையேயும் வழமையாக நடைபெறும் ஒரு நாள் கிரிக்கெட்போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிப் பழைய மாணவர் அணி 130 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

40 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இப்போட்டியில் முதலிலே துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா பழைய மாணவர் அணியினர் 6விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். ஸ்கந்தா அணியில் எஸ்.சதீஸ் 64 பந்துகளில் 7சிக்ஸர்கள் 14 பவுண்டரிகளுடன் 116 ஓட்டங்களைப் பெற்றார். எஸ்.ஜசிதரன் 1 சிக்ஸர் 15 பவுண்டரிகளுடன் 99 ஓட்டங்களையும் பி.ஜொனிற்றன் 2 சிக்ஸர் 7 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனா அணியின் பந்து வீச்சில் சிறிதரன் 2 விக்கட்டுக்களையும் ரவிசங்கர், ராஜகாந்தன்,துஷியந்தன், ஜயப்பிரியந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாப் பழைய மாணவர் அணியினர் 37 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை மட்டுமே பெற்று 130 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர். மகாஜனா அணி சார்பில் துஷ்யந்தன் 3சிக்ஸர்கள் 4 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களையும் ராஜகாந்தன் 23 ஓட்டங்களையும் ராஜராஜன், நேசன் ஆகியோர் தலா 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் சுலக்ஷன் 3 விக்கெட்டுக்களையும் ஜொனிற்றன் 2 விக்கெட்டுக்களையும், எஸ்.சதீஸ்கண்ணன், ரஜீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியில் ஆட்ட நாயகனாக ஸ்கந்தா அணியைச் சேர்ந்த எஸ்.சதீஸ், சிறந்த துடுப்பாட்ட வீரராக எஸ்.யசிதரன் சிறந்த பந்து வீச்சாளராக ஜி.சுலக்ஷன், சிறந்த சகல துறை வீரராக எல்.ஜொனிற்றன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த களத்தடுப்பாளராக மகாஜனா அணியைச் சேர்ந்த எஸ்.ரவிசங்கர் தெரிவு செய்யப்பட்டார். (50-55)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



சங்கானை இளைஞர் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டியில், சங்கானை வை.எம்.சி.ஏ அணியும், சங்கானை உதயதாரகை அணியும் மோதிக் கொண்டன. இதில் சங்கானை உதயதாரகை அணி வெற்றிவாகை சூடிக்கொண்டது.

படத்தில் இவ்விரு அணிகளும், வடமாகாண கரப்பந்தாட்டப் மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் ந.சுதேஸ்குமார் மற்றும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் நா.நாகேஸ்வரனும் காணப்படுகின்றனர். (படம் :மு.சந்திரகுமார்)

# கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

கோப்பாய், ஏப்.16

கோப்பாய் கோட்ட பாடசாலைகளிற்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

பெண்கள் பிரிவு

15 வயதுப் பிரிவு - அத்தியார் இந்துக் கல்லூரி (முதலாமிடம்), கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி (இரண்டாமிடம்).

19 வயதுப் பிரிவு

அத்தியார் இந்துக் கல்லூரி (முதலாமிடம்), அச்சுவேலி மத்திய கல்லூரி (இரண்டாமிடம்).

ஆண்கள் பிரிவு

17 வயதுப் பிரிவு - புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி (முதலாமிடம்), அத்தியார் இந்துக் கல்லூரி (இரண்டாமிடம்).

19 வயதுப்பிரிவு

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி (முதலாமிடம்),அத்தியார் இந்துக் கல்லூரி (இரண்டாமிடம்).

(50-72)




சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், அவரது பாரியார் திருமதி சிவரூபன் அபிராமி மற்றும் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்த நடராசா ஆகியோர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்படுவதையும், போட்டியில் வெற்றி பெற்ற இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை பிரதம விருந்தினர் ஆர்.சிவரூபன் இல்லத் தலைவர்களிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூபாலசிங்கம் புத்தகசாலையின் கிளை யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் தொழிலதிபர் ராஜன் பூபாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், கிளை நிறுவனத்தை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் : எஸ்.கதிரவேலு)

# பிரபாகரனின் மர்மமான...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வியல் உரிமை இருக்கிறது. ஆனால் நமது தாயகத்தில் சொந்த வீட்டுக்கே போக உரிமையற்று மக்கள் முகாமில் இருக்கிறார்கள். இப்படியான யதார்த்த நிலை இருக்கிறது. இந்நிலையில் நாடுகடந்த அரசால் சொந்த வீடு கடந்து போவதற்காவது ஓர் உரிமையை பெற்றுத்தர முடியுமா? பிரபாகரன் வெளிநாட்டில் ஓர் அரசை அமைக்கவா போராடினார். நாடுகடந்த அரசு பற்றிய கேள்விக்கும் பதிலாக கேள்விகளையே வைக்க முடியும் என்பதை நீங்கள் இப்போது புரிந்திருப்பீர்கள். இவைகள் இரண்டும் பிரபாகரன் சொன்ன பாதைகளா என்பதைப் பிரபாகரன் நேசித்த மக்கள் தீர்மானிப்பார்கள். நாம் பதில் கூற வேண்டிய தேவை இல்லை.

*கேள்வி : அப்படியானால் இன்றைய நிலையில் என்னதான் செய்வது ?*

மனோகரன் : எனது தம்பி பிரபாகரன் தமிழர் சமுதாயம் பிளவுபடக்கூடாது என்பதற்கே முன்னுரிமை கொடுத்தார். புதுமாத்தளனுக்குப் பின்னர் புலம் பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு செயலும் தமிழினத்தை பிளவுபடுத்துவதாகவே இருக்கிறது. இத்தகைய முன்னெடுப்புகள் பற்றி கருத்துக் கூறுவதைவிட அவற்றின் விளைவுகளை மட்டுமே நாம் பார்க்கவேண்டும். வடக்குக் கிழக்கில் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் எண்ணிக்கை, வெளிநாடுகளில் ஆளுக்காள் உருவாக்கியுள்ள தமீழம் தொடர்பான பணிகள், இவை அனைத்தும் தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தியிருக்கின்றனவா? இல்லை கூறு போட்டுள்ளனவா? என்பதை அவதானிக்க வேண்டும். ஒரு செயல் தமிழினத்தை கூறுபோடுமாயின் அது பிரபாகரனின் விருப்பமாக அமைய மாட்டாது. பிரபாகரன் யாரையும், எந்தத் தளபதியையும் முக்கியமாக முன்னிலைப்படுத்தியது கிடையாது. காரணம் அவருடைய முதன்மைத் தளபதிகள் தமிழீழ மக்களே. மக்களுக்குத் தெரியும் பிரபாகரன் யார் என்பது. பிரபாகரன் உருவாக்கிய மக்கள் சக்தி மாவீரர்களின் மகத்தான கனவுகளுக்கே சொந்தம், மற்றவருக்கல்ல. இத்தனை காலம் போராடி, ஒவ்வொரு நொடியும் மரணத்தோடு விளையாடி, வாழ்வுக்காலத்தின் பெரும்பகுதியை தலைமறைவு வாழ்விலேயே கழித்த பிரபாகரன் தனக்காக எதையுமே கேட்கவில்லை. எத்தனையோ பதவிகள் வந்தன, எதையுமே ஏற்கவில்லை. இன்று மாபெரும் துறவறம் போன்ற வாழ்வை எழுதியுள்ளார். அப்படிப்பட்டவர் இப்படியான காரியங்களை செய்யுங்கள் என்று யாரிடமும் கூறியிருக்க மாட்டார்..

*கேள்வி : சரி இப்படியான குழப்ப நிலை வருமென்று கருதி பிரபாகரன் தனது பிள்ளைகளில் ஒருவரையாவது உங்களுடன் அனுப்பியிருக்கலாமே ?*

மனோகரன் : நான் தான் சொல்லி விட்டேனே. அவர் பற்றற்ற வாழ்வு வாழ்ந்தவரென்று. மற்றவர்களின் பிள்ளைகள் போராடும்போது தன் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளார் பிரபாகரன் என்று திட்டினார்கள். பிரபாகரனிடம் நான் இதுபற்றி பேசியுள்ளேன். என் வாழ்வு இருக்கும்வரை, நான் நேசித்த ஈழ மண் இருக்கும்வரை என் பிள்ளைகள் வாழ்வு என்னுடன் தான் என்றார்.. தன் வாழ்வு முடிந்தால் தன் பிள்ளைகளின் வாழ்வும் அதுவாகவே முடியும். ஒவ்வொரு போராளியும் பிரபாகரனின் பிள்ளைகள்தான், ஒவ்வொரு தமிழீழக் குடிமகனும் அவருடைய உறவுதான். தன் பிள்ளை மாற்றார் பிள்ளை என்ற பேதம் பார்த்து வாழும் ஒருவரா பிரபாகரன் இல்லையே. தன்பிள்ளைகளை வெளிநாடு அனுப்பி பேதம் காட்டுமளவிற்கு அவர் உள்ளம் ஒளி குன்றியதல்ல. இதுதான் எனது உள்ளம் என்று எந்தத் தளபதியை வைத்தாவது உங்களுக்கு அவர் சொன்னாரா? அல்லது அன்ரன் பாலசிங்கத்தை வைத்தாவது சொன்னாரா இல்லையே. அவர் தனது கொள்கையை சொற்களால் சொல்லாது வாழ்ந்து காட்டிய செயல் வீரர். இப்போது பிரபாகரனின் பிள்ளைகளையும், போராளிகளையும் பிரித்து பேசியோர் வாயடைத்துக் கிடக்கிறார்கள். இப்போது பிரபாகரனின் பிள்ளைகள் யார் என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். இவர்களில் யாரை அவர் வெளிநாடு அனுப்புவது? சொல்லுங்கள் பார்க்கலாம்.

*கேள்வி : புரிகிறது. இந்த உண்மையை இதுவரை யாருமே சுட்டிக்காட்டவில்லை. இவைகளைக் கேட்கும்போது இந்த இனத்திற்கு மறுபடியும் பிரபாகரன்தான் வரவேண் டும் என்ற எண்ணமே உருவாகிறது. அவர் வருவாரா?*

மனோகரன் : புதுமாத்தளனுக்குப் பின் போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன ? எம்மை நம்பிய தமிழீழ மக்களுக்கு நாம் சொல்ல வேண்டிய பதில் என்ன ? ஆகிய கேள்விகளுக்கு உரிய பதில் இல்லாமல் பிரபாகரன் தன் வாழ்வை ஒரு போதும் வெற்றிடமாக்கியிருக்க மாட்டார். புதுமாத்தளன் நிகழ்விற்கு சில நாள்கள் முன்னதாக நடேசனிடம் ஒரு செய்தியை தெரிவித்தார். அது புலிகளுக்கு பிறகு வெற்றிடம் என்பது இல்லை என்ற செய்திதான். அதற்குப் பிறகு பிரபாகரனின் கருத்துக்கள் எதுவும் வெளியாகவில்லை.. எனவே அன்று வெற்றிடமில்லை என்று கூறியவர் அதற்கான பதிலைத் தராமல் தன் பணியை ஒருபோதும் முடித்திருக்க மாட்டார். ஒன்றுமில்லாத வாய்ப்பேச்சு வீரரின் வெற்றிடத்தில் விடுதலைப் புலிகளை உருவாக்கியவர் பிரபாகரன். புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்ற முடிவுரையை எழுதிவிட்டே போராட்டம் என்ற முதல் அத்தியாயத்திற்குள் போனவர் பிரபாகரன். இப்போது அவர் நேதாஜிபோல ஒரு வெற்றிடத்தை தன் வாழ்வில் எழுதியுள்ளார் என்று முன்னர் கூறியிருந்தேன். இப்போது மறுபடியும் அந்த இடத்திற்கே திரும்பி வருகிறேன். அன்று நேதாஜி ஒரு வெற்றிட நிலையை உருவாக்கி, அதன் மூலம் இந்தியச் சுதந்திரத்தை ஏற்படுத்தினார் என்பது தான் நேதாஜி கதையின் வெற்றிடத்தில் நிற்கும் மர்மமான உண்மை. பிரபாகரனும் அதே முடிவுரையைத்தான் எழுதியுள்ளார். தமிழ் மக்களின் கனவுகளை நினைவாக்க அவர் இருந்தும் போராடுவார் இல்லாமலும் போராடுவார்.. மறுபடியும் வெற்றிடம். வெற்றிடத்தில் யார் வருவார்? மேலும் வசனங்களில் வேண்டுமா இல்லை போதுமா ?

*கேள்வி : நன்றி, வணக்கம். உங்கள் பேட்டி உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உங்களை மறுபடியும் அவ்வப்போது சந்திக்க இருக்கிறோம்.*

மனோகரன் : வாருங்கள்.. என் தம்பி பற்றி சொல்ல என் இதயத்தில் மேலும் ஏராளம் செய்திகள் உண்டு. (முற்றும்)

**க.பொ.த.உ/த அனுமதி 2010**

2009 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றி க.பொ.த.(உ/த) வகுப்புக்கு அனுமதி பெறவுள்ள எமது மாணவர்களை 18.04.2010 அன்று ஞாயிறு காலை 8 மணிக்கு சீருடையில் தவறாது வந்து கல்லூரி அலுவலகத்தில் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்திக் கையளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

[சி/566576]




வாழ்க வையகம் உ வாழ்க வளமுடன்

**யாழ். அத்தியடி அருள்மிகு**
**ஸ்ரீ சிதம்பர நடராஜ**
**வீரகத்திப்பிள்ளையார் கோயில்**
**வசந்ததோற்சவ திருவிழா**
**16.04.2010**





அடியார் பெருமக்களே!

எம்பெருமானுடைய வசந்தோற்சவ திருவிழா இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்ப மாகித் திருவூஞ்சல் நிகழ்வினைத் தொடர்ந்து எம்பெருமான் வீதியுலா வருவார். யாழ்.அத்தியடி இந்து இளைஞர்கள் ஏற்பாட்டில் யாழ். மண்ணில் புகழ்பூத்த

| நாதஸ்வரக் கலைஞர்கள் | தவில் வித்துவான்கள் |
|---|---|
| நாதஸ்வரகான வினோதன் | சுப்புசாமி செந்தில்நாதன், |
| P.S. பாலமுருகன், | முருகையா சுந்தரமூர்த்தி, |
| V.K.கானமூர்த்தி கிருஷ்ணதாசன், | S.ராமதாஸ், |
| K.R.சுந்தர மூர்த்தி தவதாஸ், | S.ராமதாஸ் (தாவடி), |
| சுப்புசாமி ஜெயசங்கர், | சிவதாஸ் பிரபாகரன். |
| சிவதாஸ் கரிகரன். | |

ஆகியோரது கச்சேரியும் அதனைத்தொடர்ந்து யாழ்.ரமணனின் "ராஜன்ஸ்" இசைக்குழுவின் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடகர் எஸ். சுகுமார் பங்குபெறும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இறைபணியில்
யாழ்.அத்தியடி
இந்து இளைஞர்கள்.

(97057)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனங்களை வென்றெடுக்க முயலும் படைத்தரப்பினர் மரணச் சடங்குகளில் பெரு விருப்புடன் சேவையாற்றுகின்றனர்

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை இராணுவத்தினர் 'ஓய்வு' நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இது அரசிற்கு பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கின்றது. தற்போது களமுனைகள், காவல் நிலைகள், காவல் அரங்குகள் என்பனவற்றில் படையினர் இல்லை. குறிப்பாக இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகள், சில முக்கியமான வீதிகள், கடற்கரை ஓரங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் என்பனவற்றில் கணிசமான அளவு படையினர் சுழற்சி முறையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரிற்காகச் சேர்க்கப்பட்ட படையினர் தற்போது 'ஓய்வு' நிலையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அரசு மாற்று வேலைகளில் இராணுவத்தினரை வித்தியாசமாகப் பயன்படுத்தி வருகின்றது. இங்கு 'வித்தியாசமான' என்பது மக்கள் மத்தியில் இராணுவத்தினர் மீதான நல்லபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டமாகும்.

வன்னிப் பிரதேசத்தில் பூநகரிக் கிராமத்தில் ஒரு மரணச் சடங்கில் இராணுவத்தினர் நடந்துகொண்ட, செயற்பட்ட விதம் இதனை உறுதி செய்வது போன்று அமைந்திருக்கின்றது.

அரசின் செயற்திட்டத்தின் ஊடாகப் படையினர் பல உத்திகளைக் கையாண்டு வருகின்றனர். அண்மைக் காலமாக நாடு முழுவதும் பரவிய டெங்கு நோய் பல உயிர்களைக் காவு கொண்டதுடன் பலரை நோய்க்கு ஆளாக்கியும் இருந்தது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்தினரும் தொண்டு நிறுவனத்தினரும் பல்வேறு திட்டங்களையும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மக்களுக்கு வழங்கியிருந்தனர். மறுபக்கமாக இராணுவத்தினரின் படையணிகள் மக்களுடன் இணைந்து டெங்கைக் கட்டுப்படுத்த சிரமதானப் பணிகளையும், விழிப்புணர்வுக் கருத்துக்களையும் மக்களிடம் பரப்பித் துணைநின்றனர்.

இவற்றைவிட மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் யாழ்.பாதுகாப் புப் படைத் தலைமையகம் ஊடாக படையணிகள் பல இணைந்து பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தின; நடத்திவருகின்றன. பாடசாலைமட்ட இல்ல மெய்வன்மைப் போட்டிகள், உள்ளூர் விளையாட்டு அணிகளுக்கிடையிலான போட்டிகள், விளையாட்டு அணிகளுக்கும் இராணுவ வீரர்களுக்கிடையிலான போட்டிகள் என அவை அமைந்திருக்கின்றன. உண்மையில் இந்தச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் எந்தளவிற்கு நம்பிக்கையை ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது. மறுபக்கத்தில் செய்கின்றார்கள் செய்யட்டும் என்று அமைகின்றதோ மக்களுக்கு சில நன்மைகள் கிடைக்கின்றன என்பது யதார்த்தமாகும். குடாநாட்டில் நிலைமை இப்படி இருக்க வன்னிப் பகுதியில் படையினரின் பங்களிப்பு என்பது வித்தியாசமாக உணரப்படுகின்றது.

நடந்து முடிந்த யுத்தத்தின்போது எல்லாவற்றையும் இழந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாமில் தங்கியிருந்த மக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையில்

## பூநகரியில் ஒருநாள்

தற்போது படிப்படியாக மீள்குடியமர்த்தப் படுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, முக்கியமான சில பாடசாலைகளில் தற்காலிகமாக விடப்படும் மக்கள் இராணுவத்தினரின் உதவியுடன் மீளக்குடியமர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதன் முதற்கட்டமாக பாடசாலைகளில் இருந்து குடும்பத்தலைவர், தலைவியரை உழவியந்திரத்தில் ஏற்றிக் கொண்டு அவரவர் காணிகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் அவரவரது காணிகளில் சிறு குடிசை அமைப்பதற்கு தேவையான விவரங்களைச் சேகரிக்கின்றனர். மறுநாள் காலை குறிக்கப்பட்ட கிராமத்தில் மீளக் குடியமர்வதற்காக ஏற்றப்படும் குடும்பங்கள் அவரவரது காணிகளில் இறக்கப்பட்டதும் ஒவ்வொரு குடும்பத்தினரிற்கும் தற்காலிக குடிசையை அமைத்துக் கொடுப்பதற்காக 6 முதல் 8 வரையான படையினர் உதவிப் பணியில் ஈடுபடுகின்றனர். இதன்போது வீட்டுக்கு உருத்துடையவர்கள் சகல வேலைகளையும் செய்ய படையினர் அனுமதிப்பதில்லை அந்த அளவிற்கு பெரு விருப்புடன் அவர்களின் பணி இருக்கின்றது.

இவ்வாறு முக்கியமான பணியை படையினர் செய்வது மக்கள் மத்தியில் வரவேற்பையும் பெற்றிருக்கின்றது. இவ்வாறான பணிகள் முடித்தபின்பும் நலன்விசாரிக்கும் பாணியில் புலன் விசாரணை நடத்தவும் படையினரின் ஒரு பகுதியினர் விசேடமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் நோக்கத்தக்கது.

இவை இவ்வாறு இருக்க இந்த மாதம் முற்பகுதியில் (02.04.2010) அகதிமுகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று கொண்டிருந்த முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவனான பாலசிங்கம் கருணாநிதி தனது இரண்டாம் வருட அரையாண்டுப் பரீட்சை முடிவில் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த மாணவனின் மரணச் சடங்கில் படையினரின் நல்கிய பங்களிப்பை மறந்து விடமுடியாது.

மரணமான மாணவனின் குடும்பத்தினர் வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து ஓரிருவாரங்களுக்கு முன்புதான் அவர்களது சொந்த இடமான பூநகரி, கறுக்காய்தீவு பகுதியில் மீளக் குடியமர்த்தப் பட்டனர்.

இவர்கள் மீளக்குடியமரும் போது படையினர் உதவினரோ என்னவோ 12 தகரங்களில் ஒரு வேப்பமர நிழலில் அவர்களது தற்காலிக குடிசை அமைக்கப்படிருந்தது. வயல் வெளியாகக் காட்சியளிக்கும் அந்தப் பகுதியில் தற்போது நிலவும் அசாதாரண வெப்பநிலை இப்படி இருக்கும் என்று சொல்லிப் புரியவைக்க முடியாது. சுற்றியிருக்கக்கூடிய எல்லாக் குடும்பங்களும் இப்படித்தான் இருக்கின்றன. முன்னரைப் போன்று பந்தல், கதிரைகள் என்று வாடகைக்கு அமர்த்துவதற்கு எதுவுமே கிடையாது. ஆனால் வன்னியில் தரப்பாலிற்கு பஞ்சமில்லை. இதை ஒவ்வொரு தொண்டு நிறுவனங்களும் தமது நாமத்தால் எல்லாக் குடும்பங்களிற்கும் வழங்கியிருப்பதைக் காண முடிகிறது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட இந்த மாணவரின் பூதவுடல் அவரின் வீட்டுக்குச் கொண்டு செல்லப்பட்ட போது படையினர் பல்வேறு வகையில் உதவிகளை மேற்கொண்டனர். பூநகரியில் குடிதண்ணீரைப் பெறுவது சற்றுக் கடினம். எல்லா வீடுகளிலும் கிணறு இருந்தாலும் அவை உவர் நீராகவே காணப்படும். சில இடங்களில் மட்டுமே நல்ல தண்ணீர்க் கிணறுகள் உள்ளன. இந்த வெப்பமான காலத்தில் தண்ணீர் இல்லாமல் எப்படிச் சமாளிப்பது? பொறுத்த நேரத்தில் படையினர் மூன்று நான்கு தாங்கிகளில் நீரை நிரப்பி உதவினர்.

மரணச் சடங்கின் போது காலை, மதியம், மாலை நேரங்களில் உணவுகளையும் அனைவருக்கும் படையினரே வழங்கினர். உண்மையில் மரணச்சடங்கிற்கு வருபவர்கள் அயலவர்கள்.

உணவு மற்றும் நீராகாரங்களை வழங்குவது வன்னியில் ஒரு வழக்கம். இப்போது அவ்வளவுக்கு அவர்கள் வசதியாகவும் இல்லை. பெருமளவில் சமைப்பதற்கு போதுமான பாத்திரங்களைப் பெறுவதும் சிரமம்தான். ஆனால் பல்வேறு இடங்களிலும் இருந்து மரணச்சடங்கிற்கு வந்தவர்களின் பசியை எப்படியோ தீர்க்கத்தான் வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் பூநகரிப் பிரதேசத்தில் படையினரின் உதவி மிகவும் தேவையான ஒன்றாகவே இருந்திருக்கிறது. ஆனால் அவர்கள் இந்த நடவடிக்கையை கேட்காமலே செய்திருந்தனர்.

**பூமுகன்**

அன்றைய தினம் இறுதிக்கிரியைக்காக கருணாநிதியின் உடல் மயானத்திக்கு எடுத்துச்செல்வதற்குக் கூட படையினர் உதவினர். அவரின் உடல் உழவு இயந்திரத்தின் மூலம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இப்படி வன்னியில் மக்களுக்குத் துணையாகப் படையினர் ஈடுபட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். அதனை அந்தப் பிரதேச மக்கள் நன்றியுடன் எடுத்துச் சொல்கின்றனர்.

வன்னிப் பகுதியில் யுத்த காலத்தின் போது படையினரால் மக்கள் கட்டம் கட்டமாக இடம்பெயரவைக்கப்பட்டனர். இதன் போது ஷெல் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் என்று பல்வேறு இன்னல்களுக்குள் அகப்பட்டு உயிர்களைப் பறிகொடுத்து பெறுமதியான சொத்துக்களை இழந்து உடுத்த உடையுடன் அகதிமுகாம்களில்

(18ஆம் பக்கம் பார்க்க)

# 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டம்; தென்னாபிரிக்காவில் கோலாகலங்கள் ஆரம்பம்



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் தொடங்க இன்னும் இரண்டு மாதங்களுக்கும் குறைவான நாள்களே இருக்கின்ற நிலையில் தென்னாபிரிக்காவில் கோலாகலங்கள் தொடங்கியுள்ளன.

ஜூன் மாதம் 11 ஆம் திகதி தொடங்கி ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

32 நாடுகள், 9 நகரங்களிலுள்ள 10 விளையாட்டு அரங்கங்களில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகளில் கலந்துகொள்கின்றன.

உலகெங்கும் 100 கோடிக்கும் அதிகமான மக்கள் நேரிலும் தொலைக்காட்சியிலும் இந்தப் போட்டிகளை கண்டு ரசிப்பார்கள் என்று எதிர்பாக்கப்படுகிறது.

**உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி - ஓர் அறிமுகம்**

உலகின் மிகப் பெரிய விளையாட்டுத் திருவிழா என்று வர்ணிக்கப்படும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஓர் ஆபிரிக்க நாட்டில் முதல் முறையாக நடைபெறவுள்ளன.

ஆபிரிக்காவின் [illegible] உலகக் கிண்ணத்தை வெல்லும் என்கிற எதிர்பார்ப்பு அந்தக் கண்டத்திலுள்ள அனைத்து நாடுகளிலும் இருக்கிறது.

இந்த விடயத்தில், மொழி, மதம், இனம், கலாசாரம், அரசியல், போட்டி பொறாமை என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு ஓர் ஒற்றுமை இருக்கின்றது.

**நன்மைகளை அளிக்கவுள்ள போட்டிகள்**

'ஒளிமயமான எதிர்காலத்துக்காக உதைபந்து என்ற லட்சியத்துடன் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இந்த

## 'ஒளி மயமான எதிர்காலத்துக்காக உதைபந்து' என்னும் தொனிப்பொருளில் போட்டிகள்

உலகக் கிண்ண உதைபந்தாடடப் போட்டிகளை முன்னெடுத்துச் செல்கிறது.

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவுக்கு வந்த பிறகும் அது ஏற்படுத்தப்போகும் நன்மைகள் தொடரும் என சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனமான பிபாவின்(Fifa) தலைவர் செப் பிளட்டர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் கல்வி, அதுவும் உதைபந்தின் மூலம் அதை விளையடும் இளம் வீரர்கள் மூலம், அவர்களின் ஆரோக்கியத்தின் மூலம் நன்மை ஏற்படப் போகிறது. ஆரோக்கியம், கல்வி, உதைபந்து ஆகிய நன்மைகள் 2010 தொடங்கி 2015 ஆம் ஆண்டு வரை தொடரும்

செப் பிளாட்டரின் இந்த அறிவிப்பு உலகமெங்கும் பலத்த வரவேற்பை பெற்றது. இந்த முன்னெடுப்பில் பிபாவுக்கு உதவ உலகின் பல நாடுகள் முன்வந்துள்ளன.

உதைபந்தாட்டத்தின் மூலம் எதிர்காலம் என்கிற லட்சியம் ஆபிரிக்க கண்டத்திலுள்ள அனைவருக்கும் உதவும் என்றும் பிபாவின் தலைவர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டங்கள் தென்னாபிரிக்காவுக்கு மட்டும் உதவி செய்யும் என்றில்லை, ஆபிரிக்க கண்டம் முழுவதும் பலன் பெறும். ஆபிரிக்க கண்டத்தில் இந்த முன்னெடுப்பு நடைபெற்ற பிறகு உலகம் முழுவதும் இந்தத் திட்டம் எடுத்துச் செல்லப் படும்.

**புதிய விளையாட்டு அரங்கங்கள்**

ஜூன் மாதம் 11 ஆம் திகதி தொடங்கி ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 32 நாடுகள் பங்குபெறுகின்றன. அவை எட்டுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

போட்டிகள் 10 மைதானங்களில் நடைபெறும். இவை 9 நகரங்களில் அமைந்துள்ளன. கேப்டவுன், டர்பன், ஜோஹனஸ்பர்க், ப்ளூம்ஃபொண்டைன், போர்ட் எலிசபெத், நெல்ஸ்ப்ரூயிட், பொலக்வானே, ரஸ்டன்பர்க் மற்றும் பிரெட்டோரியா ஆகிய நகரங்களில் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

போட்டிகளுக்காக பல புதிய விளையாட்டரங்கங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று சோக்கர் சிற்றி (Soccar City)இந்த அரங்கில் தான் 2010 உலகக் கிண்ண போட்டியின் முதல் மற்றும் இறுதி ஆட்டங்கள் இடம் பெறவுள்ளன.

'கலாபா' எனும் மிகவும் புகழ் பெற்ற ஆபிரிக்க பானையின் வடிவத்தை மையப் படுத்தி இந்த விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கில் 95,000 பேர் அமர்ந்து போட்டிகளைக் காண முடியும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.றோட்டரக் கழகமும், றோட்டறிக் கழகமும் இணைந்து அண்மையில் நடத்திய உரும்பிராய் முன்பள்ளிக்கிடையிலான முக்கோண விளையாட்டுப் போட்டியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் போட்டிகளில் ஈடுபடும் காட்சி களை மூன்று படங்களிலும் காணலாம். (50)

## மக்கள் மனங்களை....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் தஞ்சமடைந்தனர்.அப்போது அரச தரப்பினரும் , தொண்டு நிறுவனங்களும் வழங்கிய உலருணவுப்பொருள்கள், சமையற் பாத்திரங்கள், புடைவைகள், கூரை விரிப்புகள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்ற சிறிய மூடைகளுடன் மீளக் குடியமர வைத்திருக்கும் இந்த மக்களுக்கு மீண்டும் இராணுவத்தினரே பல்வேறு வழிகளிலும் உதவிபுரிவது வித்தியாசமான ஒரு புறச் சூழலை அப்பகுதியில் ஏற்படுத்தி வருகிறது. மக்கள் தமக்கு நடந்தவற்றையெல்லாம் மறந்து இந்த உதவிகளை மனதார ஏற்றுக்கொள்கிறார்களா? அல்லது படையினர் தான் தாம் செய்த பாவங்களுக்கு பரிகாரம் தேடுகிறார்களா என்ற கேள்வி எழுவது இங்கு தவிர்க்க முடியாததாகும். எப்படியோ இந்தச் சந்தர்ப்பத்தில் படையினர் மக்கள் மனங்களை வென்று ஒரு நல்லுறவை கட்டியெழுப்ப முற்படுவதன் நீண்ட கால விளைவுகள் எப்படியிருக்கப் போகின்றன? படையினரின் இந்த மாற்றத்திற்குப் வேறெதும் பின்னணி உண்டா? என்பதைக் கண்கூடாகப் பார்ப்பதற்குச் சிறிது காலம் காத்திருந்தேயாக வேண்டும்.


## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினரும் எங்கள் கல்லூரியின் நடன ஆசிரியையுமாகிய
திருமதி ஸ்ரீவிமலகுமாரியின் அன்புக் கணவர்

### மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன்

அவர்கள் 14.04.2010 புதன்கிழமை அகால மரணமாகியதை யிட்டு நாங்கள் ஆறாத்துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

[96996]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### கந்தசாமி மரியவிதுர்சன்

மலர்வு 05✱06✱1999
உதிர்வு 16✱04✱2009

திதி: 16.04.2010

ஆகிவிட்டது ஓராண்டு
ஆறவில்லை எம்துயரம்
எம் துன்பத்தில் இருந்து
ஆறுதல் அளித்தீரே!
உம் பிரிவுத் துயரை
எவ்வாறு தாங்குவது?

இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை எம் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

V.C, அருகில்,
பருத்தித்துறை வீதி
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தி.கந்தசாமி
குடும்பத்தினர்.

[96994]

## ஈரவிழிகளுடன் ஈராண்டு



### அமரர் நடராஜா ரவிச்சந்திரன்(அப்பி)

(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன் சிமெந்துக்கூட்டுத்தாபனம்)
திதி: 16.04.2010

தோற்றம்: 26★08★1960
மறைவு: 16★05★2008

மரணம் எல்லோருக்கும்
இருக்கும் ஒரு சாசனம்
போவோம் என்று தெரிந்திருந்த
போதிலும் இவ்வளவு விரைவாய்
போவாய் என்று எண்ணவில்லை
உன் மரணத்தால் மாறிவிட்டது
என் வாழ்க்கை ஆனாலும்
மாறாமல் மறவாமல் உன்
நினைவுகளோடு நாங்கள்

41/3, கொண்டலடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

[96993]

## சிவபூமி முதியோர் இல்லம்
### மூன்றாவது ஆண்டு நிறைவு விழா

காலம் : 17.04.2010 சனிக்கிழமை காலை 9 மணி
இடம் : பாலச்சந்திரன் அரங்கு
தலைவர் : செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் (தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

அன்புடையீர்!
வணக்கம்

இறையருளாலும் இனிய மனிதர்களின் நற்பண்பினாலும் மூத்தோரைக் காக்க உருவான எம் இல்லம் மூன்றாவது ஆண்டு நிறைவைச் சந்திக்கின்றது. ஈரநெஞ்சுடைய பண்புடைய மக்கள் சிலர் இருப்பதனால் இவ்வுலகிற் பல கைங்கரியங்கள் அமைதியாக நிறைவேறிவருவதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். எமது இல்லம் குறைவின்றி நிறைவாக விளங்குவதற்கு வித்திட்ட விருட்சங்களை நாம் நன்றியோடு வாழ்த்துகின்றோம். தற்போது 43 முதியவர்கள் மிகவும் மகிழ்வாக இல்லத்தை அலங்கரித்தவண்ணமுள்ளனர். ஆத்மீகச் சூழலில் முதுமை அனுபவத்தோடும் முதுமை அழகோடும் வீற்றிருக்கும் மூத்தோரை நேசிப்பதற்கு எத்தனை உள்ளங்கள் உதவின. மறக்கமுடியாது. உதவிக்கரம் நீட்டியவர்கள், வாழ்த்தியவர்கள், அற்பணிப்புக்களுடன் பணியாற்றும் பணியாளர்கள் அனைவராலும் எம் இல்லம் மேலும் சிறப்புற்று மிளிர்கின்றது. இவ்இல்லம் அமைவதற்கு மூலவேராக உதவிய ஸ்ரீமான் கிருஷ்ணர் பாலச்சந்திரன் குடும்பத்தின் பங்களிப்பு மகத்தானது. ஆசியாலும் தன் அயராத தொண்டினாலும் பேருதவி புரியும் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கொழும்பு மனிதநேயம் அமைப்பு எம்மால் நன்றியோடு நீள நினைத்து வாழ்த்த வேண்டியவர்கள்.

சூரியன், சந்திரன் நிரந்தரமாக உதிப்பதுபோல சிவபூமி இல்லம் என்றும் மலர உங்கள் அனைவரது ஆசிகளையும் வேண்டி நிற்கின்றோம். அன்பர்களே மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் மூத்தோரைத் தரிசிக்க அன்புடன் அழைக்கின்றோம். உறவுகளுடன் கலந்து உற்சாகமூட்டுங்கள்.

ஆறுதிருமுருகன்
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை

திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்
திரு.ம.தயாகரன்
செயலாளர்

கண் வைத்திய நிபுணர்
Dr.ச.குகதாசன்
பொருளாளர்

**பிரதம விருந்தினர்**

மூதறிஞர், வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் தம்பதிகள்
*(சுகாதார இணைப்பாளர், சர்வதேச அபிவிருத்திக்கும் புனர்நிர்மாணத்துக்குமான நிறுவனம், இலங்கை)*

**சிறப்பு விருந்தினர்:**

வாழ்த்துரை பேராசிரியர் சி.குமாரவடிவேல்
*(பீடாதிபதி - விஞ்ஞானபீடம்- யாழ்.பல்கலைக்கழகம்)*

**நிகழ்ச்சி நிரல்**

மங்கள விளக்கேற்றல் : சிவஸ்ரீ சு.சுந்தரராஜக் குருக்கள் (பிரதம குரு- வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயம்)
திருமுறை பாராயணம்
வரவேற்புரை : திரு.சிவாஜி (உபதலைவர், சிவபூமி அறக்கட்டளை)
ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் நல்லை ஆதீனம், குருமுதல்வர்.
தலைமையுரை
தொடக்கவுரை : திரு.ப.விக்னேஸ்வரன் (கல்வி அதிபதி-வலிகாமம் கல்வி வலயம்)
பிரதம விருந்தினர் உரை :
சிறப்பு விருந்தினர் உரை :

**கலை நிகழ்ச்சிகள்**

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் - கோண்டாவில்
தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்
நன்றியுரை
மதியவிருந்து

**மாலை சிறப்பு நிகழ்ச்சி பி.ப.2.30 மணி ஆரம்பம்**

திருமுறை பாராயணம்
தொடக்கவுரை : மூதறிஞர் சிற்பி.சிவசரவணபவன் அவர்கள் (ஆசிரியர் இந்துசாதனம்)
கவியரங்கம் : கவிஞர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்களின் தலைமையில் (துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
விடயம் : வடிவுடை மூப்பு
பங்குபற்றும் கவிஞர்கள்:
★கவிஞர் திரு.சோ.பத்மநாதன் (இளைப்பாறிய கலாசாலை அதிபர்)
★கவிஞர் திரு.த.ஜெயசீலன் (உதவி அரச அதிபர், காரைநகர்)
★கவிஞர் திரு.நாக.சிவசிதம்பரம் (ஆசிரியர், இந்து வித்தியாலயம்,கோண்டாவில்)
★கவிஞர் திரு.பார்வதிநாதசிவம் மகாலிங்கசிவம் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி- கன்னாகம்)

பட்டிமண்டபம்: பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் (தலைவர்- தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்) தலைமையில்
விடயம்: மூத்தோரை மதிப்பதில் உன்னத மதிப்புக் கொடுத்த காப்பியங்களில் பெரிதும் முக்கியத்துவம் பெறுவது மகாபாரதமா? இராமாயணமா?
பங்குபற்றும் உரையாளர்கள்: சொல்லின் செல்வன் இரா.செல்வவடிவேல்
★கலாநிதி தி.வேல்நம்பி ★ செந்தமிழ் அழகன் ச.லலீசன் ★சொல்லருவி கு.பாலசண்முகன்

நாட்டியாஞ்சலி : பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவிகள்
நாடகம்: ஆர் அறிவார்? சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள்
நிறைவு

சிவபூமி முதியோர் இல்லம்
தொல்புரம்,சுழிபுரம், தொ.பே: 021 321 4230

தலைமை அலுவலகம்:
சிவபூமி அறக்கட்டளை,கோண்டாவில்.
தொ.பே: 21 222 7938

E-mail: sivapoomi@gmail.com/ sivapoomi@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணைப் பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கும், தீவகக் கடற்படை அதிகாரிகளுக்குமிடையிலான நல்லெண்ண சந்திப்பொன்று வேலணைப் பிரதேச செலகத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் தீவகக் கடற்படை கட்டளை அதிகாரி அஜித் அமரசிங்க மற்றும் ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரத்ன ஆகியோர் உரையாற்றுவதனை முதல் இரு படங்களிலும், அவையில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலனுடன் ஏனைய கடற்படை அதிகாரிகள் அமர்ந்திருப்பதனையும் கலந்துரையாடலுக்கு சமூகமளித்துள்ள கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் ஒரு பகுதினரை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*


40% வரை கழிவு

DBL

உத்தரவாதத்துடன்




18,19,20 ஆகிய தினங்களில்

யாழ்ப்பாணம் மத்திய மகா வித்தியாலயத்தில் Booth # B09

DEEN BROTHERS IMPORTS (PVT) LTD. 0716-551551

அனைவரையும் அழைக்கிறோம்

JAFFNA *International* 2010 TRADE FAIR

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை



சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்

முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY:

LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

FOR INFORMATION CONTACT:

4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563 E-mail: rizwan@saexhibitions.com

www.saexhibitions.com/jitf

IN ASSOCIATION WITH CCIY

JOINTLY ORGANISED BY FCCISL

SUPPORTED BY SRI LANKA CONVENTION BUREAU

SPONSOR Sri Lanka Telecom Mobitel We Care. Always.

PARTNER COUNTRY INDIA


OFFICIAL PRINT MEDIA

OFFICIAL RADIO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்......





கோண்டாவில் கிழக்கு காளிகோயிலில் அண்மையில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் சுவாமி தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் பக்தர்கள் புடைசூழ தேரில் ஆரோகணித்து காட்சிகொடுப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)*



கொழும்புத்துறை ஆத்திப்புலம் ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றபோது விநாயகப் பெருமான் சித்திரத்தேரில் வீதியுலா வருவதை படத்தில் காணலாம். *(படம்: கோபி)*



வேலணை மண்கும்பான் வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா வின்போது விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப் பதற்கு எழுந்தருளி வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: லக்ஸ்மன்)*

## ஆன்மீக வழக்கங்களூடாக அறிவியலை வலியுறுத்துவது இந்து மதம்

இந்துப் பண்பாட்டு மரபில் விரதங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள் ளன. சமய தத்துவ ரீதியில் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விரதங்களுக்கு விளக்கம் கற்பிக்கப்படுகின்றது.

விரத அநுட்டானங்களின்போது புறச் சுத்தியாகிய சரீர சுத்தமும் அகச் சுத் தியான மனச்சுத்தமும் மிகவும் அவசியம். இவற்றினூடாக ''சுத்தம்'' என்னும் அறிவியல் அறிவு றுத்தப்படுவதைக் காணலாம். ஒரு தொழிற்சாலை போன்றே எமது உடல் அத்தொழிற்சாலைக்கு ஓய்வு கொடுப்பது இன்றியமையாததே.எனவே தான் ''விரதம்'' என்னும் பெயரால் எமது உடலுறுப்புக்களில் ஒன்றாகிய உணவுக் கால்வாய்க்கும் அதனுடன் தொடர்புகொண்டு சுரக்கும் சுரப்பிகளுக்கு ஓய்வு கிடைக்கும். இத்தகைய அறிவியல் பார்வை எம்முன்னோரிடம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருப்பதை இத்தகைய விரதங்கள் பற்றி ஆராயும் போது புலனாகிறது.

விரதங்களில் ''உபவாசம்'' என்னும் முறையும் சைவசமயிகளால் ஆலய பண் பாட்டில் பேணப்படுகின்றது. தற்காலிகமாக உணவை விலக்குதல் சில நோய்களுக்கு பரிகாரமாக விதிப்பதுண்டு. விரதம் என்பது ஆரோக்கிய நிலையில் அகப்புறச் சுத்தங்களை மையமாகக்கொண்டு அனுஷ்டிக்கப்படுவது. அநாவ சியமான ஊழைச்சதை எனப்படுவதை குறைத்து வீரியம், தேஜஸ் என்பவற்றை விருத்தியாக்குகின்றது. விரத காலங்களில் வாழையிலையில் சாப்பிடுவதனால் ஒருவரின் எச்சில் மிச்சங்களை இன்னொருவர் பாவிப்பது தவிர்க்கப்படுகின்றது. ஆதலால் தொற்றுநோய்கள் பரவுதல் தவிர்க்கப்படும். இத் தகைய சுகாதார ஆரோக்கிய வாழ்வுசார் அறிவியல் சிந்தனை கள் ஆலயப் பண்பாட்டில் விர தங்கள் மூலம் மக்களிடம் பேணப் படுவதால் ஆரோக்கிய, ஆன் மீக வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஞானக்கதிர்

ஆலயப் பண்பாட்டில் வழிபாட்டு நோக்கில் விரத மரபில் உணவு சிறப்பிடம் பெறுகின்றது. விரத காலங்களில் சோறு,சாதம் எனப்படும் பச்சையரிசிச் சாதம், பருப்பு,காய்கறிகள்,தயிர்,மோர்,நெய் என்பன முக்கிய இடம்பெறுகின்றன.இவை போசாக்கான உணவுகளாக இருப்பது குறிப்பிடப்பாலது.

ஆலய வழிபாட்டை முன்னிறுத்தி சைவ உணவுப் பழக்கத்தை எமது முன்னோர் சமூகத்தில் கைக்கொண்டனர். தரமான உணவானது உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமின்றி உளநலனுக்கும் அவசியமென்பதை எமது மூதாதையர் நன்கு அறிந்து வைத்துள்ளனர். எமது மக்களின் சைவ உணவுப் பழக்க வழக்கங்கள் உடல் நலத் துடன் உள நலனையும் பேணுவதில் அதிகம் உதவுகின்றன.குறிப்பாக நாவலர் பெரு மானது சிந்தனைகளைக் கொண்டதாய் அமைகின்றன. திருவிழாக் காலங்கள் போது ''கற்பூரச்சட்டி'' எடுத்தல் இடம்பெறுவதைக் காணலாம். கற்பூரச்சட்டியை தலையில் எடுத்துச் செல்வதால் உச்சியில் காணப்படும் ''சகஸ் சக்கரத்தை'' நேர டியாகத் தூண்டும் செயல் நடைபெறுகிறது. இதன்போது உடம்பினுள் ஜீவசக்தி அதிகரிக்க வழியேற்படுகின்றது. அடுத்து ''காவடி'' எடுத்தல் என்னும் செயற்பாடு இடம்பெறுவதையும் காணலாம்.உயிர்நிலைப் புள்ளிகள் மேலூசிகளையும், வேல்,சூலம் முதலிய பொருள்களைக் குற்றும்போது உயிர் நிலைப்புள்ளிகளி னூடாக மின்காந்த ஓட்டம் சீராக நடைபெறும்.இதன் மூலமும் ஜீவசக்தி அதி கரிக்கும். இத்தகைய செயன்முறைகளில் இன்றைய ''அக்குபஞ்சர்''முறை வைத் தியத்திற்கு அடிகோலியது. எனவே எம் ஆலயப் பண்பாட்டு மரபுகள் அறி வியல் சிந்தனைகளின் முன்னோடியாகவும் அமைவதைக் காணமுடிகின்றது.

### ஒவ்வொரு திங்களும் பொது மருத்துவர் 'கிளினிக்'

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் புதன்கிழமைகள் தோறும் நடைபெற்று வந்த பொது மருத்துவ கிளினிக் இம்மாதத்தி லிருந்து ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும் நடைபெறவுள்ளதாக பருத் தித்துறை ஆதார வைத் தியசாலையின் மாவட்ட அதிகாரி டாக்டர் வி.ஜெய ராஜா அறிவித்துள்ளார். (50-16)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோபாலகிருஷ்ணன்-திலகவதி
தம்பதியரின் புதல்வன்
**சாரங்கன்**

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 7A, 2B பெறுபேறு பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதோடு மேலும் பல உயர் கல்வி கற்று பட்டங்கள் பலபெற்று சீரும் சிறப்புடனும்வாழ நல்லூர்க் கந்தனை வேண்டி வாழத்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அப்பம்மா, பெரியமாமா, பெரியமாமி,
ரஞ்சண்ணா, சிவா அண்ணா,
விஜி அண்ணா, சசி அக்கா.

கெனடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(96976)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

கனடா மொன்றியலில் வசிக்கும் (மானிப்பாயைச் சேர்ந்த)
ஆ.செல்வச்சந்திரம் (ராஜீ) - காயித்திரி
தம்பதிகளின் செல்வப் புதல்வன் **செந்தூர்ஜன்**

*''குழந்தைகள் வாழ்வினைச் செழிக்கவைக்கும் வைரங்கள் வம்சம் தழைக்கவந்த புத்தம்புதிய தளிர்கள்''*

1



இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை
தனது பிறந்தநாளை கனடாவில்
பெற்றோர், சகோதரிகள், உறவினர்,
நண்பர்கள் சகிதம் தனது இல்லத்தில்
வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
செந்தூர்ஜனை அன்புச் செல்வம், ஆசைச்
செல்வம், இன்பச் செல்வம், ஈசன் தந்த
இனியசெல்வத்தை ஐங்கரன் துணையுடன்
ஜெகன் மாதாவாம் புவனேஸ்வரி அம்பாள்
அருளால் சகல ஐஸ்வரியங்களுடனும்
பல்கலையும் கற்று சீரோடும், சிறப்போடும்
பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க வாழ்க
என உறவினர்அனைவரும்
இதயம் மகிழ
வாழ்த்துகின்றார்கள்.



**த.தில்லைநாதன்**
**(அம்மப்பா - மானிப்பாய்)**
*[விலங்கியற்றுறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் டிப்போவின் சாரதி திருமலையில் விபத்தில் பலி!

## நித்திரையில் ஆழ்ந்திருந்த வேளை பஸ் ஏறி அனர்த்தம்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணம், கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த இளம் சாரதி ஒருவர் திருகோணமலை டிப்போவில் நிகழ்ந்த எதிர்பாராத விபத்துச் சம்பவத்தில் மரண மானார்.

நேற்றுமுன்தினம் புதுவருடத்தினத்தன்று யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்குப் போக்குவரத்துச் சபை பஸ்ஸைச் செலுத்திச் சென்றிருந்த பிரஸ்தாப சாரதி, அன்றிரவு டிப்போவுக்குள் படுத்து நித்திரையில் ஆழ்ந்திருந்தபோது, மற்றைய பஸ்ஸை "யார்ட்" டில் இருந்து வெளியே "றிவேஸில்" எடுத்தவேளை அவர் மீது சில்லுகள் ஏறியதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் புலோப்பளையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மெஸியாஸ் (வயது 38) இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதியான இவர், பயணிகளின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## ஆசிரியர்களுக்கான தரவட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1, 2 ஆகிய வகுப்புக்களின் ஆசிரியர்களுக்கான தரவட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)

# அமீர் அலிக்கு தேசியப் பட்டியல் எம்.பி. பதவி வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப்.16

நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும் கட்சியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் அமைச்சர் அமீர் அலிக்கு தேசியப் பட்டியல் எம்.பி. பதவியொன்றை வழங்குமாறு கோரி அவரது கட்சியான அகில இலங்கை முஸ் லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவிடம் கடிதம் ஒன்றைக் கையளித் துள்ளது.

திங்கட்கிழமை இக்கடிதம் கையளிக்கப்பட்டது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

இந்த வேண்டுகோள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் என்று சுசில் பிரேமஜயந்த அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸிடம் கூறியுள்ளார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசுடன் இணைந்து போட்டியிட்ட அமீர் அலி 16ஆயிரத்து 246 விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார்.

அதேபோல், திருகோணமலை மாவட்டத்தில் அரசுடன் இணைந்து போட்டியிட்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் மற்றுமோர் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் நஜீப் ஏ.மஜீதும் தோல்வியடைந்தார்.

வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனும்அங்கு அக்கட்சியில் போட்டியிட்ட புதுமுகமான ஹுனைஸ் முஹம்மட் என்பவருமே வெற்றிபெற்றனர்.

இதனைத் தொடர்ந்து அக்கட்சி அரசிடமிருந்து ஒரு தேசிய பட்டியலைப் பெற்று அதை அமீர் அலிக்கு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது எனக் கூறப்படுகின்றது.



கேசாவில் விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா புதுவருடப்பிறப்பன்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதை முதலாவது படத்திலும், தேரில் வீதியுலா வரும் அருட் காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் - லக்ஸ்மன்)

## நிலையறி பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வு

யாழ்ப்பாணம், ஏப். 16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட நிலையறி பரீட்சைகளின் புள்ளிப் பகுப்பாய்வை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்வி அலுவலகக் கல்வி அபிவிருத்திப் பிரிவில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## மெதடிஸ்த திருச்சபை நிகழ்வில் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஏப். 16

கௌரவமான முறையில் இலங்கைத் திருநாட்டில் சமாதானத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற மெதடிஸ்த திருச்சபையின் பணியை தான் மதிப்பதாகவும், அதனைப் பாராட்டுவதாகவும் இந்த உயரிய முயற்சிக்குத்தான் பக்கபலமாக இருப்பதுடன், தனது உதவிகள் தொடர்ந்து கிட்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை யாழ். மத்தியக் கல்லூரி மைதானத்தில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஜெப மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஜெப ஆராதனை மாநாட்டில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் திருச்சபைகளின் சிங்கள, தமிழ், பறங்கியர் எனப் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்,16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான ஒன்றிணைந்த பாட செயலமர்வுகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 21 திகதி வரை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

இன்று தரம் 4வகுப்பு ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி தரம் 5 வகுப்பு ஆசிரியர்களுக்கும் 21ஆம் திகதி தரம் 3வகுப்பு ஆசிரியர்களுக்கும் செயலமர்வுகள் நடை பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# குடாநாட்டில் வேலையில்லா பிரச்சினை வெகு விரைவில் தீர்த்து வைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.16

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் கட்டடம் வெகு விரைவில் புனரமைக்கப்பட்டு மாதாந்தம் பௌர்ணமி தினங்களில் கலை நிகழ்வுகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை யாழ். கொழும்புத்துறை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த தேவானந்தா இப் பகுதியில் இளைஞர், யுவதிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை பெரும் விவகாரமாக உருவெடுத்து வருவதை தான் உணர்வதாகவும் இந் நிலை யாழ்.குடாநாடு முழுவதும் காணப்படுவதாகவும்- விரைவில் யாழ். குடாநாட்டில் மூன்று பெரிய ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு அதன் மூலம் சுமார் 5000 இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு தான் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அதே நேரம் உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கி அதனூடாகவும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டத்தையும் தான் விரைவில் செயற்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் போது விளையாட்டுப் போட்டிகளில் தெரிவான வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் அமைச்சர் பரிசில்களையும் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

சனசமூக நிலையத்தின் தலைவர் நடராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர், பிரதி மேயர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி சனசமூக நிலையக் கட்டடப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென அமைச்சர் ஏற்கனவே 3.5 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## "88 ஆவது அகவை" நூல் வெளியீடு

வடமராட்சி, ஏப். 16

தொண்டைமானாறு சந்நிதியான் சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையில் முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலவாணரின் "88 ஆவது அகவை" நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் அன்னதான சுரபி எஸ்.மோகன் சுவாமிகளின் அருளாசியுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் வெளியிட்டு வைக்கவுள்ளார். இளைப்பாறிய ஆங்கில விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தி மதிப்பீட்டு உரையை நிகழ்த்தவுள்ளார். (ஒ-6-236)



தமிழ் - சிங்கள புதுவருடத்தை யொட்டி திஸ்ஸமகாராமை ரஜமகா விகாரைக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு மரக்கன்று ஒன்றை நடுவதையும் அருகில் அமைச்சர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# அத்தியடிப்பிள்ளையாரின் தீர்த்த தினமான நேற்று பக்தர்களின் நகைகள் அபேஸ்!

கொழும்புத்துறை, ஏப்.16

அத்தியடிப்பிள்ளையார் ஆலய தீர்த்த தினமான நேற்று அங்கு கூடியிருந்த பக்தர்களிடமிருந்து நான்கு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன.

ஒரு தாலிக்கொடி, மூன்று சங்கிலிகள் அடங்கலாக 12பவுண் எடையுள்ள தங்க நகைகள் பக்தர்களின் கழுத்தில் இருந்து மாயமாக மறைந்துள்ளன.

தங்களையே மறந்து வழிபட்டுக் கொண்டிருக்கும் போது 'தைரக' நகைகளை வெட்டி எடுத்து திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகக் கூறப்பட்டது.

கோவில் திருவிழாக்கள், பொது வைபவங்களில் மக்கள் கூடும் போது தங்க நகைகளை அபகரித்துச் செல்லும் நோக்கில் பெண்கள் குழுக்கள் உலாவி வருவதாகவும் கூறப்பட்டது.

சாதாரண திருவிழாக்கிளிலேயே இவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் நடைபெறும் சாத்தியம் காணப்படுவதால் நல்லூர், சந்நிதி, வல்லிபுரம் போன்ற கோயில்களில் பெருந்திருவிழாக்களில் நிலைமை இன்னும் மோசமாகலாம் என்று பக்தர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ஒ-135)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்,16

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.ரஞ்சனா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை தலைவர் கலாநிதி திருமதி சிவஞானமணி பஞ்சராசாவும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.சீனிவாசனும் கலந்துகொள்வர்.

மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கலும், பிரதேச மகளிர் அமைப்புக்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவரங்குறைப் படிப்பகம் ...நகர சபை, யாழ்ப்பாணம்

## பிரதமர் பதவியில் அமர்பவர் யார்?

# புதியவர் ஒருவருக்கு இடம் கிடைக்குமா? பழையவரே நியமிக்கப்படுவாரா?

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடந்த பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டதையடுத்து புதிய பிரதம மந்திரியாக யார் நியமிக்கப்படுவார் என்பது குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் இன்னமும் ஒரு முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

ஊடகங்களில் தற்பொழுது அதிகமாகப் பேசப்படும் பெயர்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், பிரதம ஆலோசகரும், பிரசார முகவருமான பசில்ராஜபக்ஷவின் பெயர் முக்கியத்துவம் பெற்றுள்ள அதே வேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத் திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சரும் முன்னாள் சபை முதல்வருமான சிறிபால டி சில்வா, முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான டி.எம்.ஜய ரட்ண மற்றும் முன்னாள் பிரதம மந்திரி ரட்ணசிறி விக் கிரமநாயக்க ஆகியவர்கள் முக்கியமானவர்களாவர்.

### வாய்ப்புக்குரிய பசில்ராஜபக்ஷ

இவர்களில் அதிக சாதகமான வாய்ப்புக்குரியவராக பசில்ராஜபக்ஷவே காணப்படுகின்றார். தேர்தலில் அவரே தமது மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான விருப்புவாக்குகளைப் (425,861) பெற்றவர். ஜனாதிபதியின் சகோ தரர், நெருங்கிய நம்பிக்கைக்குரியவர், நெடுங் காலமாக முகவராகச் செயற்படுவர்.

இலங்கையில் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுவர், ஜனாதிபதிக்கு மிகவும் நம்பிக்கைக்குரியவராகவே இருந்து வந்துள்ளார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசமைப்பின் படியாக அதிகாரங்கள் யாவும் ஜனாதிபதியிடமே தாரைவார்க்கப் பட்டிருப்பதால் இலங்கையில் பிரதம மந்திரி என்ற பதவி அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததன்று. ஆனால் அரசியல் மட்டத்தில் அதிக செல்வாக்கு உடையது. உப ஜனாதிபதி ஒருவர் இல்லாத நிலையில் வரிசைக் கிரமப்படி ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பிரதம மந்திரியாவார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நம்பிக்கை வாய்ந்த ஒருவர் பிரதம மந்திரியாக வேண்டுமானால் அந்தத் தகுதியைப் பொருத்தமாக நிரப்பக்கூடியவராய் பசில் இருக்கிறார். ஆனால் அவருக்குள்ள குறைபாடு முன் எப்போதும் ஒரு அமைச்சராக அவர் பதவி வகித்த வரில்லை. மேலும் சமீப காலத்திலேயே நாடாளு மன்றத்துக்குள் பிரவேசித்தவர். மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர், அமைச்சர் என்ற முறையில் நிறைய அனுபவ முள்ளவர். அவரது பொல நறுவைத் தேர்தல் தொகுதியில் அதிகப்படியான விருப்பு வாக்குக ளையும் பெற்றவர் ஆவார்.

முன்னாள் சுகாதார அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் பதுளை மாவட்டத்தில் 141,990 விருப் புவாக்கு களைப் பெற்றவருமாவார். ஆனால் இப்படியான தலைவர்கள் அதிக அரசியல் ஆதாயத்தை எதிர்பார்த்து தமது தேர்தல் சாதனைகளை ஜனாதிபதிக்கு சிக்கலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

டி.எம். ஜயரட்ண சிரேஷ்ட தலைவரான போதிலும் சர்ச்சைகளில் சிக்காத ஒரு தலைவர். அத்துடன் அரசியல் முக்கியத் துவமான கண்டி மாவட்டத்தில் இருந்து வருபவர். இம்மாவட்டத்தில் எதிர்தரப்புப் பக்கம் சாய்ந்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியமும் ஜனாதிபதிக்கு இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக கையில் உள்ள இந்தத் தெரிவுகள் அனைத்தையும் ஒரு பக்கம் ஒதுக்கிவைத்து விட்டு பிரதம மந்திரி பதவியில் மிகவும் பழக்கப்பட்டவரும் சோதனைகள் பலவற்றைக் கடந்தவருமான ரட்ண சிறிவிக்கிரம நாயக்காவையே மீண்டும் அப்பதவியில் நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (ப)

## பத்திரிகை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொல்லப் பட்டது, பன்னர் ரிவிர பத்திரிகை ஆசிரியர் உபாலி தென்ன கோன் கொலை முயற்சிக்கு உள்ளாகியிருந்தது, கீத் நுவார் என்ற மூத்த செய்தியாளரும் கடத்தப்பட்டு தாக்கப் பட்டிருந் தது போன்ற சம்பவங்களில் இந்த இராணுவ உளவுப் பிரிவுச் சிப்பாய்களுக்கு தொடர்பு இருந்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் நற்பெயருக்கு களங் கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ள முயற்சித்தது தொடர்பாக அவசர கால சட்டங்களின் கீழ் இந்தச் சிப்பாய்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர் தற்போது இவர்கள் விடுவிக்கப்பட்டு, தங்களுடைய முந்தைய பொறுப்புகளில் மீண்டும் நியமிக்கப்படுவதாகவும் பயங்கரவாத விசாரணை பொலிஸ் பிரிவினர் கொழும்பு நீதிவானிடம் தெரிவித் துள்ளனர்.

ஆனால் இதே குற்றச்சாட்டுகள் தொடர் பில் வேறு சில சிப்பாய்கள் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

பத்திரிகையாளர் விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக பிரிகேடியர் துமிந்த கெப் பதிவலன என்ற மூத்த இராணுவ அதிகாரி ஒருவரும் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இந்த விசாரணைகள் குறித்த அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பக்குமாறு கொழும்பு மஜிஸ் திரேட் பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

## வன்முறைகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்களில் அனேகமானவைகள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இடை யிலான மோதல்களாகும். தேர்தலுக்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இதுவரை ஐந்து முறைப்பாடுகளே கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆறுபேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

அதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு அதி கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற பாலித ரங்க பண்டார, அதே கட்சியில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற சாந்த அபேசேகர மற்றும் அவரது ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐ.தே.க. வேட்பாளர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டு விளக் கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர் - இப்படி அவர் மேலும் தெரிவித் தார். (அ-சி)

## கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மௌலானாவை தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து அவருக்கு அமைச்சுப் பதவியொன்றையும் வழங்குமாறு மௌலானாவிற்கு நெருக்கமான சிலர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த வேண்டுகோளை நிராகரித்த ஜனாதிபதி அதற்குப் பதிலாகவே ஆளுநர் பதவியைத் தருவதற்கு உறுதியளித்தார் என்றும் கூறப்படுகின்றது.

## அமெரிக்காவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து 4 ஆண்களே அகதிகளாக சென்றுள்ளனர். அவர்கள் அனைவரும் விசாரணைகளின் பன்னர் நாடுகடத்தப்படுவர் என அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் வந்த படகில் இருந்து பெருந் தொகையான பணமும் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ-6)

## பிரபாகரனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தற்சமயம் மலேசியா அல்லது சிங்கப்பூரில் தங்கியிருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

"மருத்துவக் கவனிப்பு என்ற மனிதாபிமான அடிப்படையில் அவருக்குத் தமிழகத்தில் தங்கியிருப்பதற்கான அனுமதியை இந்தியா வழங்க முன்வந்துள்ளது. அதற்கான தகவல், சம்பந்தப்பட்ட தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பிரபாகரனின் தாயார் எந்நேரமும் இந்தியா வரலாம். அதற்குத் தடையோ, இடைஞ்சலோ இல்லை. ஆனால் அவரைக் கூட்டி வரும் சாக்கில் முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கம் நாட்டுக்குள் வர அனுமதிக்கப்படமாட்டார்." - என இந்திய அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஒபாமாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்பியல்புகள் நிறைந்த - சுபீட்சம் மிக்க - ஜனநாயக தேசம் ஒன்றை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவதற்காக அனைத்து இலங்கையர்களிடையேயும் - அவர்கள் எந்தப் பின்னணியைக் கொண்டவர்களாக இருப்பினும் - உள்நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ வசிப்பவர்களாயினும் - அவர்கள் அனைவரிடையேயும் பற்றுணர்வை மீளப் புதுப்பிக்கும் பொருத்தமான சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தப் பாதையில் உங்களுக்கு அதிகம் உதவவும், எங்களது இரு நாடுகளின் மக்களிடையேயான உறவை மேலும் வலுப்படுத்தவும் அமெரிக்கா ஆவலாக உள்ளது.

பாதுகாப்பான, மகிழ்ச்சியான, சுபீட்சமான புதுவருடத்துக்கு எனது வாழ்த்துக்களைத் தெரி விக்கிறேன் - என்று உள்ளது. (அ-சி)

## புதிய நாடாளு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான முக்கியமான தகவல்களும் ஆவணங்களும் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளமையினால் இதற்கு சமுகமளிக்கும்படி உறுப்பினர்களை கேட்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள் நுழைவதற்கு வசதியாக தமது அடையாள அட்டையை கொண்டுவரும்படியூம் நாடாளுமன்ற கட்டடத்துக்குள் வரும்போது உறுப்பனர் நுழைவாயிலை பாவிக்கும்படியூம் உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (அ-6)

## பல தரங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம், சர்வதேசத்தின் நவீன முறைமைப் பாய்ச்சலுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இலங்கையை மாற்றுவதற்காக இது சம்பந்தமான விசேட தொழில்நுட்ப அமைச்சுக்களையும் உருவாக்க ஜனாதிபதி திட்டமிட்டிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

புதிய அமைச்சுக்கள், அமைச்சர் தரங்கள் ஆகியவற்றை உருவாக்குவது தொடர்பில் பல்வேறு நாடுகளிலும் உள்ள அமைச்சரவைக் கட்டமைப்புகளை ஜனாதிபதி ஆராய்ந்து வருகின்றார் என்றும் அரசுடன் தொடர்புடைய செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

"ஒட்டுமொத்த தேசத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவை குறித்து மட்டுமல்லாமல் குறிப்பிடக்கூடிய பிரதேசங்களின் அபிவிருத்தி, முன்னேற்றம் ஆகியவை குறித்தும் கவனம் செலுத்துவதற்கு ஜனாதிபதி விரும்புகின்றார். அந்த இலக்கை நிறைவு செய்வதற்காகவே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு மேலதிகமாக உதவி, பிரதி, வழிநிலை அமைச்சர்கள் பற்றியெல்லாம் ஜனாதிபதி ஆராய்கின்றார். பிரதேசங்களின் தேவை கருதி அவசியப்பட்டால் இந்த அடுத்த மட்ட அமைச்சர் பதவிகளை ஆளும் தரப்புக்கு வெளியில் உள்ளோருக்கும் வழங்குவது குறித்தும் ஜனாதிபதி சிந்திக்கின்றார்." - என்று அரசுடன் தொடர்புடைய வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

புதிய நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்களின் விவரம் வர்த்தமானியில் உத்தியோக பூர்வமாக வெளியானதும் அமைச்சர்கள் நியமனம் உத்தியோகபூர்வமாக இடம்பெறும் எனத்- தெரியவருகின்றது. (அ-சி)


உயர் அஞ்சல் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி விற்பனையாகின்றது.
P.காண்தாசன்
விலை 150.00
கிடைக்கும் இடங்கள்:
பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, கவிதா வவுனியா

A/L 2012
கலை, வர்த்தகம்
ஆரம்பம் 17.04.2010 சனி
ஆரம்பம் 16.04.2010 வெள்ளி 9am
O/L DAY CLASS
தரம் 6,7,8,9,10,11, புதிய அனுமதிகள்
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகே.

தேவை
ஆங்கிலம் கற்பிப்பதற்கு கொழும்பில் இயங்கி வரும் பிரபல நிறுவனத்தின் யாழ். கிளைக்கு பெண் ஆசிரியர்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0717065527 (91068)

Navalar Institute
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
A/L 2012 கணித, உயிரியல் பிரிவுகள்
Che : S. வாசு Phy: S. கஜன்
Com. Mat: R. சயந்தன் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
Bio: V.A ஞானேந்திரன்
ஆரம்பம் : 17-04-2010 சனி 3.00 மணி

A/L 2012
பௌதிகவியல்
N.பாபு
(சனி, ஞாயிறு 9am)
ஆரம்பம்: 17.04.2010 சனி 9am
* புதிய மாணவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
* தனிப்பட்ட அனுமதி உண்டு
DMI கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உப அஞ்சல் அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை
தொடர் கருத்தரங்கு
வெள்ளி முதல் திங்கள் வரை 1pm - 5pm
ஆசிரியர்: P.கமல்தாசன், S.பாசோதரன்
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்.

A/L 2012 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
ஆரம்பம் ஏப்ரல் 17 சனிக்கிழமை காலை 8.00 மணி
J/NEC Clock Tower Road, Jaffna.

கலை, வர்த்தக பிரிவுகள் A/L 2012 நாளை காலை 9.00 மணி DMI JAFFNA

Deutsch, Dutch, French, Italian வகுப்புக்கள்
ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் ஜேர்மன் எம்பசி பரீட்சைக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மேலும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

தரம் 6 முதல் O/L ற்கு
யாழ் நகரின் நம்பர்.1 கல்வி நிறுவனம்
எடிஷன் அக்கடமி
☆ யாழ்ப்பாணம் ☆ கொக்குவில் ☆ வட்டுக்கோட்டை ☆ சண்டிலிப்பாய்
ஆகிய எமது 4 கிளைகளில் ...
...O/L Day Class...
ஆரம்பம் – 28.04.2010 புதன் காலை 8.00 மணி
O/L ல் எமது சாதனைகள்
★ தொடர்ந்து 11 வருடமாக மாவட்டத்தில் அதிகூடிய 9A.
★ English Medium த்திலும் தொடர்ந்து அதிகூடிய 9A.
★ மாவட்டத்தில் 4 முறை எமது மாணவர் முதலிடம்.
★ தேசிய மட்டத்தில் 2 முறை எமது மாணவர் முன்னிலை.
★ இம்முறை 8 பேர் 9A பெற்று இமாலய சாதனை.
★ இன்று வரை 81 மாணவரை 9A பெற வைத்தள்ளது எடிஷன்.
எமது புதிய சாதனை இலக்கு
இம்முறை Day Class ல் இணையும் அனைவரையும் O/L ல் 100% சித்தி அடைய வைப்பதற்கு எமது ஆசிரியர் குழு தங்களை அர்ப்பணிக்க திட சங்கற்பம் கொண்டுள்ளது...
பெற்றோர்களே, மாணவர்களே!
✲ அனுமதிகளை உறுதி செய்யுங்கள் ✲ O/L ல் சித்தியை பெற்றிடுங்கள் ✲ சாதனையாளர் ஆகுங்கள்


## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு ராசாத்தி (வெள்ளை)



மாவைகலட்டி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் லேன், தாவடி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு ராசாத்தி (வெள்ளை) நேற்று (15.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன், தாவடி, கொக்குவில். தகவல்: பிள்ளைகள், மருமக்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org